விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 15 புதன்கிழமை (28.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 130

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## ஐ.தே.மு.–ஐ.ம.மு. சந்திப்பு இறுதித் தீர்வின்றி பேச்சு முடிவு

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்படுவது தொடர்பில் அக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்குமிடையில் நேற்று மாலை நடைபெற்ற விசேட சந்திப்பு இறுதி முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் முடிபடைந்துள்ளது.

தேசியப் பட்டியல் நியமனம் விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தவறான முடிபினை எடுத்துள்ளதாகக் கூறி ஜனநாயக மக்கள் முன்னணி தனித்து இயங்கப் போவதாக அறிவித்தது.

இந் நிலையில் இந்தப் பிரச்சினைக்கு முடிவுகள் எட்டப்படுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் (18 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி மாணவன் கொலை வழக்கு ஜூன் 3 வரை விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் மாணவன் கபில்நாத் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இவ் விசாரணையின் போது 4,5 சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டது.

அதேவேளை பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள இரண்டாம் சந்தேக நபரின் பிணையும் இரத்துச் செய்யப்பட்டது.

இதேவேளை முதலாம் சந்தேக நபரைத் தேடி வருவதாகப் பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் மூன்றாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மாணவன் கப்பம் கோரப்பட்டு கடந்த மாதம் கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ஐ.நா. அரசியல் பிரதிநிதி பொஸ்கோ அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம்

## நிபுணர்கள் குழு அமைப்பது சந்தேகம்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரின் அரசியல் விவகாரப் பிரதிநிதி லியன் பொஸ்கோ அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. லியன் பொஸ்கோவின் இலங்கை விஜயத்திற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. இவரது இலங்கை விஜயத்தினையடுத்து ஆலோசனைக்குழு அமைப்பது குறித்த சந்தேகம் எழுந்துள்ளது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளை வானில் கடத்தப்பட்ட யுவதி மயங்கிய நிலையில் மீட்பு

### வடமராட்சியில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

வெள்ளை வான் ஒன்றில் கடத்தப்பட்ட யுவதி ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டு மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் துன்னாலைப் பகுதியில் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய பெண் உட்பட இருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நெல்லி (18 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த–மன்மோகன் இரகசியப் பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்குமிடையில் இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள அதிகாரப் பரவலாக்கல் குறித்து இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பூட்டானில் நடைபெறும் 16–வது சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் இரு நாட்டுத் தலைவர்களும் இரு தரப்பு விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இலங்கையில் ஏற்படுத்தப்படவுள்ள புதிய அரசியல் சாசனம் (18 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்கப் பொதுமக்கள் முன்வர வேண்டும்!



### மாவை சேனாதிராஜா எம்.பி. அழைப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெறும் கடத்தல்கள், கப்பம் பெறுதல், கற்பழிப்பு, கொலைகள் போன்ற இரத்தத்தை உறைய வைக்கும் பீதியும், அச்சமும் நிறைந்த செயல்கள் தொடர்வதைத் தடுப்பதற்குப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

இதற்காக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு, போர் முடிபுக்கு வந்துவிட்டது என்று அரசு அறிவித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் ஆள்கடத்தல்கள், கற்பழித்தல், கோடிக் கணக்கில் கப்பம் பெறுவது, அதற்காகவே கொலைகள் நடைபெறுவது குறிப்பாக வட பகுதியில் தொடர்கின்றமையால் மக்கள், இளம் சமூகம், மாணவர்கள் மிகுந்த அச்ச (18 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த உரிய சட்டம் தேவை

### முன்னாள் நிர்வாக சேவை அதிகாரி தகவல்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையில் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையிலான உரிய சட்டங்கள் தேவை என்று முன்னாள் நிர்வாக சேவை அதிகாரியான பிரதாபன் இராமானுஜம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நிர்வாக சேவையில் அதிலும் குறிப்பாக அமைச்சுக்களின் செயலாளர் போன்ற உயரிய பதவிகளில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் போதாது என்று பல தரப்பிலும் குறை கூறப்பட்டு வருகின்றது.

இலங்கையின் புதிய அமைச்சரவையின் பல்வேறு அமைச்சுகளுக்கு தலைமை தாங்கும் செயலாளர்கள் (02 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலய ஆசிரியர்களைக் கடமைக்குத் திரும்புமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு


(திருகோணமலை)


வன்னிப் பாடசாலைகளில் கடமையாற்றி தற்போது யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களில் முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களை தமது கடமையைப் பொறுப்பேற்குமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிவித்துள்ளதாவது, கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டது.

இதில் வன் (18 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





வண்ணை நாச்சிமார் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்றுக் காலை 10 மணிக்கு நடைபெற்றது. 15 நாட் களைக் கொண்ட இவ்வாலய மகோற்சவத்தில் நேற்று 14ஆவது நாட் திருவிழாவாக தேர் உற்சவம் இடம்பெற்றது. மூன்று தேர்களில் நாச்சி அம்மன், விநாயகர், சுப்பிரமணியப் பெருமான் ஆகியோர் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தினர். காலை 10 மணிக்கு தேரில் எழுந்தருளி அருள் பாலித்த அம்பாள் நண்பகல் 12 மணிக்கு தேரில் இருப்பிடம் வந்து சேர்ந்தார். தொடர்ந்து பச்சை சாத்தி தேரில் இருந்து சுவாமி இறக்கப்பட்டது. நாச்சியம்மன் பக்தர்கள் சூழ தேரில் திருவீதியுலாவருவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்-சுரேன்)*

## தமிழ் மொழித்தினம்-2010 மாவட்ட, மாகாணப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் மொழித் தின மாவட்ட மற்றும் மாகாணப் போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்டமட்ட நாட்டுக் கூத்துப் போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மற்றும் திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறும் என தமிழ் மொழித்தின யாழ். மாவட்டமட்ட தெரிவுக்குழுத் தலைவர். வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் அன்று காலை 8.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு சமுகம் தந்து தமக்குரிய போட்டிகள் நடைபெறும் பாடசாலைகளுக்கு செல்லுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு மாகாண மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்,

இவ்வருடம் மாவட்டமட்ட எழுத்தாக்கப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்கள் அடையாள அட்டை சகிதம் வருகைதந்து போட்டியில் கலந்து கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (ச)

## தனுன திலகரட்னவை கைது செய்ய தேடுதல்

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா வின் மருமகன் தனுன திலகரட்னவை கைது செய்யும் முகமாக மிகிந்தலை ரஜமக விகாரையில் குற்றப்புலனாய்வுப்பிரிவினர்நேற்றுதேடுதலொன்றை நடத்தியுள்ளனர்.

இந்த தேடுதல் நட்வடிக்கையின் போது தனுன திலகரட்னவை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடிக்கவில்லை என மிகிந்தலை ரஜமக விகாரையின் மதகுரு கூறினார்.

தனுன திலகரட்னவை கைது செய்யுமாறு கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி கொழும்பு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வாள்வெட்டில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் ஒன்றில் இளைஞன் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கானை பிளைக் வீதியைச் சேர்ந்த ரி.தங்கேஸ்வரன் (வயது 28) என்ற இளைஞனே காயங்களுடன் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

**காணி விற்பனைக்கு**

இல.43 அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுண்ணாகம் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் கதைக்கலாம்.

Dr.R.கனகலிங்கம் 0779522105
Mr.சி.தனஞ்சயன் 0714102174
Mrs.ச.ஜெயபாலன் 0771622770
(1212)

**ஸ்ரீராம ஜெயம்**

இந்தியாவின் எட்டயபுரத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஜோதிடர் S.சந்திரபோஸ் ஜாதகம், கைரேகை, எண் கணிதம், திருமணப் பொருத்தம் மிகத்துல்லியமாகப் பார்க்கப்படும். T.P.:0778752163

414, சன்ஜெயா உணவகம்,
மேல்மாடி அறை இல.02
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(1249)

## சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை...

பட்டியல் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டது.

இந்துப் பட்டியலில் ஓரிரு அதிகாரிகளே தமிழ், முஸ்லிம் போன்ற இனச்சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

இலங்கை போரின் காரணமாக பல தமிழர்கள் புலம் பெயர்ந்து சென்று விட்டதன் காரணமாகவே அவ்வாறு நிர்வாக சேவையில் போதிய அளவு தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் தற்போது இல்லை.

இந்த நிலையில் அத்தகைய சேவைகளுக்கு ஆட்களைச் சேர்கின்ற போது சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு செய்வதற்கான சட்டங்களும் தற்போது இலங்கையில் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னர் ஆர்.பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அப்படியான இட ஒதுக்கீட்டுக்கான சட்டங்கள் கொண்டுவரப்பட்ட போதிலும் பின்னர் நீதிமன்ற தீர்ப்பு ஒன்றினால் அந்த ஏற்பாடு ரத்துச் செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட் டார்.

ஆகவே அரசியலமைப்புக்கு அமையும் வகையில் அவ்வாறான சட்டம் ஒன்று மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும்.

அதேவேளை அமைச்சு செயலாளர்கள் போன்ற உயர் பதவிகளுக்கான நியமனங் களின் போது ஜனாதிபதி தன்து அதிகாரங் களைப் பயன்படுத்தி நிர்வாக சேவைக்கு வெளியே இருந்தும் ஆட்களை நியமிக்க முடியும் என்றும் இராமானுஜம் சுட்டிக்காட்டு கிறார்.

ஆகவே அப்படியான வசதிகளைப் பயன்படுத்தி சிறுபான்மையினருக்கு சில சாதகமான நியமனங்களை செய்ய முடியும் என்றும் அவர் கூறுகிறார். (ச-5)

**கைத்தொழில் சேவைகள்**

புதிய தொழில்களுக்கு திட்ட அறிக்கை ( Project Report) தயாரித்தல், இயந்திரங்கள் உபகரணங்கள் பெற்றுத்தரல், தொழிற் பயிற்சி பற்றிய ஆலோசனைகள், சுயதொழில் ஆரம்பிப்பவர்களுக்கு பயிற்சியும் வழிகாட்டலும்

**தொண்டர்கள் தேவை**

கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் தகவல்கள் சேகரிப்பதற்கும் தன்னார்வத் தொண்டர்கள் ( Volunteers ) தேவை. ஆர்வமும் அர்ப்பணிப்பும் முக்கியம்.

**ம.ஜனநாயகம்**
பொறியியல் ஆலோசகர்

+61296367846 0714702122
Jananagakam@yahoo.com
(1276)

**31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை (30.04.2010) அழைப்பு**



திருமதி பரமேஸ்வரி சிவானந்தன்

அமரர்
**திருமதி பரமேஸ்வரி சிவானந்தன்**
(ஆசிரியை)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 26.03.1935 | 31.03.2010 |

அன்பின் உருவாய்
அன்னை வடிவாய்
பண்பின் நிறைகுடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எம்மையும் எம் குடும்பத்தையும்
அன்பு பொழிந்து அறவழிகாட்டி
இருள் அகற்றி ஒளி தந்து
இமைப் பொழுதும் இறையை மறவாதிருந்து
இன்று சிவன் பதத்தில் வீற்றிருக்கும் அன்னையே
தொடர்ந்தும் எம் வாழ்விலும், நினைவிலும்
நல்வழி காட்டுங்கள்.

எமது அன்னை நோயுற்றபோதும், சிவபதமடைந்தபோதும், நேரிலும், உள்நாட்டு வெளிநாட்டுத் தொலைபேசி மூலமும் துயர் பகிர்ந்த மற்றும் பல்வகை உதவிகள் புரிந்த அனைத்து நல்லுள்ளங்கட்கும் நன்றி தெரிவிப்பதுடன், அன்னாரின் இல்லத்தில் 30.04.2010 மு.ப. 10.30 மணியளவில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (1283)

சோழியவத்தை,
துன்னாலை வடக்கு, கரவெட்டி,
021 226 3147

-குடும்பத்தினர்.

**கரவை செஞ்சுடர் விளையாட்டுக் கழகம்**
**அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு**

எமது கழகத்தால் 14.04.2010 அன்று நடத்தப்படவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் அன்றைய தினம் நடைபெறவில்லை.

ஆதலால் 14.05.2010 வெள்ளிக்கிழமை பி.ப.5 மணியளவில் கரவெட்டி மேற்கு சகாதேவன் குடியிருப்பு ஞானவைரவர் ஆலய முன்றலில் சீட்டிழுப்பு நடைபெற்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம் 16.05.2010 அன்று வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்
கரவை செஞ்சுடர் விளையாட்டுக்கழகம்,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
(1280)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



14.04.2010, 15.04.2010, 16.04.2010 ஆகிய தினங்களில் நடைபெற்ற கரவை செஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தின் 32ஆவது ஆண்டு விழா விளையாட்டுப் போட்டிக்கு நிதியுதவி வழங்கியதுடன்

எமது கழகத்தின் விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்த பாரம்பரிய கைத்தொழில்துறை சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கரவை செஞ்சுடர் விளையாட்டுக் கழகம்,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
(1280)

# இன்று ஒரு தகவல்

## மனிதனின் மகத்துவம்

யூதேயா மலைப்பகுதியில் ஒரு கூட்டம் நடந்து கொண் டிருந்தது. அக்கூட்டத்தில் இயேசுநாதர் பேசிக்கொண்டி ருந்தார்.

அப்பொழுது பிரமாண்டமான துலாக்கோல் ஒன்றை அவர் அக்கூடத்திலிருந்தவர்களுக்குக் காட்டினார்.

அப்படி ஒரு தராசை அந்த மக்கள் முன்னெப்போதும் பார்த்திருக்கவில்லை. அவ்வளவு பெரிய தராசு அது.

இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றையும் அந்தத் தரா சில் வைத்து எடைபோடுகிறார் அவர்.

அதில் ஒரு பக்கத்தட்டில் அந்த யூதேயா மலைப்பகுதியில் கண்ணுக்குத் தெரிந்த அத்தனை பொருட்களையும் எடுத்து வைக்கிறார். மலைச்சாரலில் வளர்ந்திருக்கும் ஒலிவ் மரங்கள், மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருக்கும் ஆட்டு மந்தைகள், அதுவரைக்கும் தோண்டியெடுக்கப்பட்ட தங்கம், உலகத்தில் உள்ள விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் இடது பக்கத் தட் டிலேயே வைக்கிறார்.

மக்கள் இதனை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

''இன்னொரு தட்டில் வைப்பதற்கு எதுவுமே இல் லையே'' என்று அவர்களெல்லாம் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். உலகத்திலுள்ள எல்லாவற்றையும் ஒரு பக்கத் தட்டிலேயே வைத்தாயிற்று. அவ்வளவையும் ஈடுகட்டும் அளவிற்கு அடுத்த பக்கத் தட்டில் எதை வைக்க முடியும்?

எல்லோரும் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந் தார்கள்.

இயேசுநாதர் சுற்றும் முற்றும் பார்க்கிறார்.

அங்கே பக்கத்திலிருந்த ஒரு சின்னக் குழந்தையை எடுத்து வலது பக்கத் தட்டில் வைக்கிறார். அவ்வளவு தான்.

இடது பக்கத்தட்டு ஆட ஆரம்பித்தது. மெதுவாக மேலே போக ஆரம்பித்தது. மிகமிக உயரத்துக்குப் போய்விட்டது. அதிலிருந்த பொருட்களெல்லாம் கீழே விழுந்து விடுமோ என்று நினைக்கும் அளவுக்கு ஆகிவிட்டது.

எல்லோரும் ஒன்றும் புரியாமல் இயேசு பெருமானின் முகத்தைப் பார்க்கிறார்கள். அவர் சொல்கிறார்.

''ஒருவன் தன் ஆன்மாவுக்குக் கேடு விளைவித்து உலகமெல்லாம் தனதாக்கிக் கொள்வதனால் அவனுக்கு ஈடாக வரும் பயனென்ன? ஒருவன் தன் ஆன்மாவுக்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்?'' (மாற்கு 8:36-37) என்கிறார்.

இந்தச் சம்பவத்திலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன?

இந்த உலகத்தில் இருக்கும் எல்லாவற்றையும் விட அதிக விலையுடையது மனிதனின் ஆன்மா தான். இந்தச் சம்பவத்தின் மூலமாக அவர் மக்களுக்கு இதனை எடுத்துக்காட்டுகிறார்.

இன்று நாம் படும் கவலைகளுக்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

மனிதனின் மதிப்பை மனிதன் இன்னமும் முழுதாக புரிந்து கொள்ளவில்லை. அது தான் காரணம்.

இப்பொழுதெல்லாம் உலகத்தில் நடக்கும் சம்பவங்களைப்பார்த்தால்...

மனித உயிர் மிகவும் மலிவாக போய்விட்டதே... என்ற நினைப்புத்தான் வருகிறது.

சமீபத்தில் பத்திரிகையில் ஒரு நகைச்சுவைத் துணுக்குப் பார்த்தேன்.

ஒரு ராஜா காட்டுக்கு வேட்டையாடப் போய் விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்பொழுது கூட வந்தவர்களிடம் விசாரிக்கிறார்.

'' அமைச்சர் இருக்கிறாரா?'' என்றார் ராஜா.

''இதோ இருக்கிறேன்'' என்றார் அமைச்சர்

'' சேவகர் இருக்கிறாரா?'' என்றார் .

''இதோ இருக்கிறேன்.'' என்றார் அவர்.

'' தளபதி இருக்கிறாரா?'' என்றார்.

'' இருக்கிறேன்'' என்றார் தளபதி.

''அப்பாடா! அப்படியானால் நான் சுட்டது கரடியைத்தான்'' என்றார் ராஜா. மனித உயிர் மீது மன்னருக்கு எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கட்டுரை ஆக்கப் போட்டி யாழ்.மாவட்டம்

(யாழ்ப்பாணம்)

மக்களிடையே பரஸ்பர உறவு மற்றும் தொடர்பாடல் என்பனவற்றில் மேம்பாட்டினை ஏற்படுத்தும் அதே சமயம் சிவில் விவகாரங்களுக்கும் பொது மக்கள் உறவுகளுக்குமான அலுவலகமானது யாழ். மாவட்ட செயலகத்துடன் இணைந்து விஷேமாக பாடசாலை மாணவர்களிடையே எழுத்தாற்றலினை விருத்தி செய்யும் முகமாக கட்டுரை ஆக்கப் போட்டி ஒன்றினை நடத்துவதற்கு ஒழுங்கு செய்துள்ளது.

**பங்குபற்ற தகுதியானவர்கள்:**

இப்போட்டியானது இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படும்.

1. க.பொ.த.(உயர்தர) மாணவர்கள் (21 வயதுக்கு உட்பட்டவர்கள்)

2. திறந்த போட்டி

**மொழி மூலம்:**

தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய தனித்தனி பிரிவுகள்

**கட்டுரை ஆக்கப் போட்டிக்கான தலைப்புக்கள்:**

1. இலங்கையில் இனங்களுக்கிடையே ஐக்கியத்தினை எவ்வாறு ஏற்படுத்தலாம்?

2. இலங்கையில் பின்பற்றப்படுகின்றவாறு இந்துசமயம், பௌத்த சமயம் மற்றும் கிறிஸ்தவ சமயம் ஆகியன.

3. பல்லினத் தன்மையுள்ள நிலையில் ஒற்றுமை.

**விருதுகள் மற்றும் சான்றிதழ்கள்**

**பாடசாலை மாணவர்களுக்கானது:**

வலய மட்டம் மற்றும் மாவட்ட மட்டம் என்பனவற்றில் 1 ,2 ஆம் மற்றும் 3ஆம் இடங்களுக்கான வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**திறந்த போட்டிக்கானது:**

மாவட்ட மட்டத்தில் வெற்றி பெறுகின்ற 1,2 ஆம் மற்றும் 3 ஆம் வெற்றியாளர்களுக்கான பரிசுகள் வழங்கப்படுவதுடன் மேலும் பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

**போட்டிக்கான குறிப்புக்களும் விதிமுறைகளும்:**

1. யாழ். மாவட்டத்திலுள்ள நிரந்தர குடியிருப்பாளர்கள் மாத்திரமே பங்கு பற்ற முடியும். (யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த வேறு இடங்களில் வசிப்பவர்களும் பங்குபற்ற முடியும்)

2. ஒவ்வொரு பிரிவிலும் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஒரு கட்டுரையினை மாத்திரமே ஒருவர் சமர்ப்பிக்க முடியும்.

3. பாடசாலை மாணவர்களுக்கான சொற்களுக்கான வரையறை ஆயிரம் முதல்- ஆயிரத்து ஐந்நூறு (1000-1500) சொற்களாகவும் திறந்த பிரிவிற்கான சொற்களுக்கான வரையறை மூவாயிரம் தொடக்கம் மூவாயிரத்து ஐந்நூறு (3000-3500) சொற்களாகவும் இருக்கும்.

4 கட்டுரை/கட்டுரைகள் , A4 அளவுடைய தாள்களின் ஒரு பக்கத்தினை மாத்திரம் பயன்படுத்தி எழுதப்பட வேண்டும் அல்லது கணனி மூலம் தட்டச்சு செய்யப்பட வேண்டும்.

5. கட்டுரை/ கட்டுரைகளுடன் , பங்குபற்றுபவரது விபரங்கள் வேறாக தனியே இணைக்கப்பட வேண்டும்.

6. பாடசாலை மாணவர்களது கட்டுரை/கட்டுரைகள் அவர்கள் கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் ஏனையவர்களது ஆக்கங்கள் பிரதேச செயலாளர் அல்லது திணைக்கள்/நிறுவன தலைவர் ஆகியவர்களில் யாராவது ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7. கட்டுரைகள் சிவில் விவகாரங்களுக்கு பொதுசன உறவுகளுக்குமான அலுவலகம் பாதுகாப்புப் படை தலைமைச் செயலகம், ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2010 மே மாதம் 15 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

8. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் *கட்டுரை ஆக்கப் போட்டி* என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

9. பரீட்சை நடுவர்களினைக் கொண்ட சபையினது தீர்மானமே இறுதி முடிவாக இருக்கும். (2)

# யாழ்ப்பாண வணிகர் கழகத்தினால் தனியார் துறையினருக்கான வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வணிகர் கழகத்தினால் தனியார் துறையினருக்கான வேலைவாய்ப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் சிற்றூழியர்கள், சேல்ஸ் மன் , எழுதுவினைஞர்கள் , கணனி இயக்குநர் , விற்பனை பிரதிநிதிகள், உதவி கணக்காளர் , கணக்காளர் , உதவி முகாமையாளர் , முகாமையாளர் போன்ற துறைகளில் வேலைவாய்ப்பு பெற விரும்புபவர்கள் சுய விபரத்துடன் கூடிய விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பங்கள் நாளை வியாழக்கிழமை முதல் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் இத்துறைகள் சார்ந்தவர்களுக்கு வேலை வழங்க விரும்புபவர்கள் யாழ் வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என வணிகர் கழகத்தலைவர் இ. ஜெயசேகரன் அறிவித்துள்ளார். (4)

# இராசி பலன்

*28.04.2010*


*சித்திரை 15 ,புதன்கிழமை*
*பூரணை மாலை 6.37 மணிவரை*
*சுவாதி பின்னிரவு 4.53 மணிவரை*
*இராகுகாலம் 11.58 - 1.28 மணிவரை*
*சுபநேரம் 4.28 - 5.58 மணிவரை*
*ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் கொடியேற்றம், சண்டிலிப்பாய் சீரணி நாகம்மை தேர், சித்திராபௌர்ணமி விரதம், சித்திரகுப்த விரதம் , நோன்மதி தினம்*

| | |
|---|---|
| மேடம் | பிரயாண நன்மை, நண்பர்கள் சந்திப்பு, பெருமையடைதல், முயற்சி கைகூடும். |
| இடபம் | செய்தொழில் விருத்தி, காரிய அனுகூலம், தேகநலன், போசன நன்மை. |
| மிதுனம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், தனவிரயம், நண்பர்கள் சந்திப்பு. |
| கடகம் | மனச்சஞ்சலம், தாய்வழி உறவு , சுபசெலவு, வாகனசுகம். |
| சிங்கம் | தொழில்நன்மை, உறவினர் வருகை, எடுத்த காரியம் கைகூடும், தனவருவாய். |
| கன்னி | வேலை சுமை, காரியதாமதம், தன்னம்பிக்கை குறைவு, பணவிரயம். |
| துலாம் | நல்ல முயற்சி, விருந்துபசாரம், சிந்தனை மிகுதி, போசன சுகம். |
| விருச்சிகம் | சயனசுகக் குறைவு, காரிய அலைச்சல், பிதாசிந்தை, சுபசெலவு. |
| தனுசு | கீர்த்தி, ஆரோக்கியநிலை, மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | இனியதகவல், அதிகாரம், சுபநிகழ்வு, காரிய அனுகூலம். |
| கும்பம் | உடல் உழைப்பு, அஜீரணக் கோளாறு, வீண்பயம், முயற்சி தாமதம். |
| மீனம் | எதிர்பாராத செலவு, உடல்நலக் குறைவு, வாகனபயம், போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 50 |
| தக்காளி | 80 | 90 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 60 |
| கரட் | 100 | 120 | 90 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | -- | -- | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 50 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 70 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 |
| பீற்றூட் | 60 | 70 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 |
| போஞ்சி | 150 | 180 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 30 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35 |





யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமிமண்டபத்தில் இடம்பெற்ற யாழ். போதனாவைத்தியசாலை புற்றுநோய்ப் பிரிவினரின் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு கண்காட்சியில்கலந்துகொண்டவர்களையும் அவர்களுக்கான விளக்கங்களை அளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- டுசாந்தன்)

# புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு கண்காட்சியை பார்வையிட்டோரின் கருத்துக்கள்...



**வீ.கணேசராசா**
**(அதிபர் -யாழ் இந்துக் கல்லூரி)**

யாழ் குடாநாட்டில் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் இப்படியான கண்காட்சி முக்கியம் தேவை. ஆண்களை விட பெண்களே கூடுதலாக இந்நோயால் பாதிப்புற்றி ருக்கின்றார்கள்.

மக்களுக்கு விழிப்புணர்வை ஏற் படுத்த இப்படியான கண்காட்சியை ஒவ்வொரு கிராமங்களிலும் நடத்த வேண்டும். விசேடமாக புற்றுநோய் வந்தபின் பலர் வைத்திய சாலைக்கு செல்கிறார்கள். 40-50 வயதிற்குட்பட்டவர்கள் நோய் இருக்கிறதோ இல்லையோ பரிசோதனை செய்து பார்க்க வேண்டியது கட்டாயமானதாகும்.

ஆகவே இக்கண்காட்சி மிகவும் பிரயோசனமானதாகவும் இன்றைய காலத்தின் தேவையாகவும் உள்ளது.



**திருமதி**
**எஸ்.தனபாலசிங்கம்**
**(ஆசிரியர்- யாதிருக்குடும்ப கன்னியர்மடம்)**

விடயங்களை அறிந்துள்ளோம். மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

இந்நோயினை வரமுன் தடுப்பதற்குரிய வழியாக உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் நோய்வரும் போது ஆரம்ப அறிகுறிகள் என்பன பற்றி எடுத்துக் கூறியிருந்தார்கள்.

எமது மூதாதையர்கள் காலத்தில் தானியங்கள், பழங்கள் என சுத்தமானதாக போசாக்கு மிக்க உணவுகளை உட்கொண்டனர். ஆனால் தற்போது இவ்உணவுகளை நாம் எடுக்க தவறுவதும் உடற்பயிற்சிகளை மேற்கொள்ளாமையும் இந்நோய்க்கு ஓர் காரணம்.

மாணவர்கள் பார்வையிடுவதனால் அவர்கள் மூலமாக பல்வேறு பட்டவர்களுக்கு இவை குறித்த விழிப்புணர்வுகள் கொண்டு செல்லப்பட்டாலும் கிராமங்களிலும் இக் கண் காட்சி நடத்தப்பட வேண்டும்.

**எஸ்.மோகன்**
**(யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன்)**



வியாபார நோக்கம் கருதி சில இடங்களில் உணவுகளிலும் மரக்கறிக ளிலும் சரி இரசாயனக் கலவைகள் அதிக ரித்து காணப்படுகின்றதும் இந்நோய்க்கு காரணம். இதிலிருந்து பாதுகாப் பதற்கு வழி முறைகளை வழங்கினோம். இக்கண்காட்சியை பார்த்த பின்பு யாருக் காவது புற்று நோய் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் இருப்பின் யாழ் போதனாவைத்திய சாலையில் புற்று நோய் கிளினிக் என்று பிரதி சனிக்கிழமை தோறும் 8 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெற்று வருவதால் வைத்திய ஆலோசன்னகளை அங்கு பெற்றுகொள்ள கூடியதாக விருக்கும்.



**ரி.தனீஷன்**
**(யாழ் இந்துக்கல்லூரி மாணவன்)**

இக்கண்காட்சியை பார்வையிட்ட எமக்கு மிகவும் பிரயோசனமான விளக்கங்களை பெறக்கூடியதாக விருந்தது. புற்று நோய் தாக்கம், பரவும் முறைகள், பரிசோதனை முறைகள், உணவுப் பழக்கவழக்கங்கள் போன்ற தெரியாத பல விடயங்களை கற்றுள்ளோம்.

பதாகைகள் மூலம் விளக்கங்களை பெற்றிருந்தாலும் கூட செய்கை முறை மூலம் இவற்றை காண்பித்தால் மிகவும் பிரயோசமாக இருக்கும்.

பாடங்கள் ரீதியாக இவற்றை கற்றுக் கொள்வதை விட இப்படியான கண்காட்சி மூலம் விளக்கங்களை வழங்கும் போது மாணவர்களாகிய எமக்கு மட்டுமன்றி பல்வேறு பட்டநபர்களும் அறிய வாய்ப்பாகவுள்ளது. (2-30)

# நேத்ரா ரீ.வி.யின் ராகமேடை இசை நிகழ்ச்சிக்கான குரல் தேர்வு

(யாழ்ப்பாணம்)

நேத்ரா தொலைக்காட்சியின் ராகமேடை சிறுவர்களிற்கான இசைப் போட்டி நிகழ்ச்சிக்கான குரல் தேர்வு முதன் முதலாக யாழ் நகரில் வீரசிங்க மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

இதில் யாழ் மாவட்டத்தை சேர்ந்த அறுபதுக்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமிகள் கலந்து கொண்டு இசையுடன் தமது திறமையை வெளிக்காட்டினர்.

இதன் அடுத்த கட்ட குரல் தேர்வு மட்டக் களப்பு வை.எம்.சி.எ மண்டபத்தில் நாளை காலை9 மணி தொடக்ம் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை மே மாதம் 8 ஆம் திகதி ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திலும் இதற்கான குரல் தேர்வுகள் இடம் பெறவுள்ளதாக நேத்ரா நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியான தமது தொலைக்காட்சி நிறுவனத்தின் புதிய படைப்பு என்றும் இதில் பங்கு பெறும் போட்டியாளர் இசை ஞானம் உள்ளவர்களாவும், 10 தொடக்கம் 18 வயதுக்குட் பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இக் குரல் தேர்வில் தோற்ற முடியாதவர்கள் ஏனைய இடங்களில் இடம்பெறும் தேர்வுகளில் பங்கு பற்றலாம் என்றும் தொடர்பு கொள்ள விரும்புவோர் 0773124360 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

# கையடக்கத்தொலைபேசியில் கதைத்தவர் மின்னல் தாக்குதலில் பலியானார்

தெல்தோட்டை ஹைறத் கிராமத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கடும் மின்னல் நேரத்தில் கையடக்கத் தொலை பேசியில் கதைத்த இராணுவ வீரரொருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

தெல்தோட்டைப் பகுதியில் நேற்று முன் தினம் மாலை 4 மணியளவில் கடும் மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதன்போது கடும் காற்றும் வீசியது.

இவ்வேளையில் ஹைறத் தோட்டத்தில் வீடொன்றிலிருந்த இராணுவ வீரரொருவர் தனது கையடக்கத் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தார்.

கடும் மின்னலின் போது தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த இராணுவ வீரர் அவ்விடத்திலேயே கருகிப் பலியானார். வீட்டில் வேறு ஆட்கள் இருந்தபோதும் அவர்களுக்கு அதிக பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. உயிரிழந்தவரது சடலம் பின்னர் தெல்தோட்டை ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்லப்பட்டது.

இதே நேரம் கடும் மழையுடன் இங்கு பலத்த காற்றும் வீசியதால் பயன் தரு மரங்கள் உட்படபல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் அடியோடும் பெயர்க்கப்பட்டுள்ளன. வீடுகள் யாவும் சேதமடைந்துமுள்ளன. (2-4)






கொழும்பு பரிவர்த்தனையின் 5ஆவது கிளை நேற்று ஆஸ்பத்திரி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஸ்,யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் பூரணச்சந்திரன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் கொழும்புப் பங்குச் சந்தையின் தலைவர் நிகால் பொன்சேகா, பிணைகள் பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் உதயசிறி காரியவசம் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## வடக்கு-கிழக்கில் ஐயாயிரம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த அமெ. திட்டம்

இலங்கையில் உள்ள தனியார் துறையினருடன் இணைந்து போரினால் பாதிப்படைந்த வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் 5 ஆயிரம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு அமெரிக்க அபிவிருத்தி அமைப்பு முன்வந்துள்ளது.

உள்ளூரில் இயங்கிவரும் ஐந்து தனியார் அமைப்புக்களுடன் இணைந்து முழுநேர தொழில் வாய்ப்புக்களை அனைத்துலக அபிவிருத்திக்கான அமெரிக்க அமைப்பு உருவாக்க முன்வந்துள்ளதாக அமெரிக்க தூதரகம் வெயியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அபிவிருத்தி அமைப்பினால் முதலீடு செய்யப்படும் 5.3 மில்லியன் டொலர்களின் மூலம் இலங்கையின் தனியார் துறை ஆயிரத்து400 மில்லியன் ரூபாய் பெறுமதியான முதலீடுகளை பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

விவசாயம், புடவைக் கைத்தொழில், அத்தியாவசிய பொருட்களின் உற்பத்தி போன்ற துறைகளில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளதாக அமெரிக்க தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (2-4)

## வடக்கு - கிழக்கில் சேவையாற்றும் பொலிஸாருக்கு தமிழ்மொழி பயிற்சி

### பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு பிரதேசங்களில் சேவையாற்றும் ஆறாயிரம் பொலிஸாருக்கு தமிழ்மொழி பயிற்சிகளை வழங்க பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதன் மூலம் மக்களுக்குத் தேவையான சேவைகளை சிறந்த முறையில் வழங்க முடியும் என்று எதிர்ப்பார்ப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்தார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது பொலிஸ் அகடமி திறப்பு விழாவில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக் களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சேவையாற்றும் பொலிஸாருக்கு இந்த பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இவ்வாறான பயிற்சி வழங்குவதன் மூலம் வடக்கு -கிழக்கு பிரதேசங்களில் வாழும் மக்களுக்குத் தேவையான சேவைகளை சிறந்த முறையில் வழங்க முடியும்.

மூன்று மாதங்களுக்கு 300 பேர் என்ற அடிப்படையில் ஐந்து வருடத்திற்கு ஆறாயிரம் பேருக்கு பயிற்சி வழங்கப்படும். பொலிஸாரின் தொழில் ரீதியான ஆளுமைகளை மேம்படுத்துவதே பிரதான நோக்கமாகும்.

இந்த பொலிஸ் அகடமியை இதற்கு உச்ச அளவில் பயன் படுத்த திட்டமிட்டுள்ளோம். களணி பல்கலைக்கழகத்துடன் இந்த பொலிஸ் அகடமியை இணைத்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (2-4)

## மக்களின் எதிர்பார்ப்புகளை ஈடு செய்யும் வகையில் திட்டங்களை முன்னெடுக்க முடியும்

### பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)



ஏனைய சகல அமைச்சுக்களின் உதவியுடன் மக்கள் எதிர்பார்த்துள்ள பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்தை துரிதமாக பெற்றுக் கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்பட போவதாக பொருளாதார அபிவி ருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போது, ஊடகவியலாளர்களிடம் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார அபிவிருத்தியும் சுபீட்ச மும் நாடு முழுவதிலும் உள்ள கிராமங்கள் வரை சென்றடையும் வகையில் புதிய அபிவிருத்தி திட்டங்கள் வகுக்கப்படும். துரித அபிவிருத்தி நடவடிக்கைகளில் சுற்றுலாத்துறை, விவசாயம், நிர் மாணத்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு போன்ற துறைகள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்படும்.

புதிய அமைச்சின் கீழ் மக்களின் எதிர்பார்ப்புகளை ஈடுசெய்யும் வகையில் விரிவான வேலைத்திட்டங்களை ஈடுசெய்யும் வகையில் விரிவான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் எனவும் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-4)

## அரசின் கணக்கு வாக்கெடுப்புக்கு ஐ.தே.க.கடும் எதிர்ப்பு தெரிவிப்பு

வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்குத் திராணியற்ற அரசாங்கம் நாட்டின் ஒட்டு மொத்த மக்களை ஏமாற்றி மீண்டும் ஒரு கணக்கு வாக்கெடுப்பை நடத்துவதற்கு முயற்சித்து வருகின்றது. இத்தகைய முயற்சியைக் கண்டிக் கின்ற அதேவேளை நாடாளுமன்றத்தில் எதிரணிகளை இணைத்துக் கொண்டு தமது எதிர்ப்பினை வெளிக்காட்டப் போவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அதேவேளை இதுவரை காலமும் ஏமாற்றப்பட்டு வந்த மக்கள் மீண்டும் ஏமாற்றப்படுவதானது கவலைக்குரியதுமானது என்று தெரிவித்துள்ள ஜே.வி.பி. மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அவர்களது கனவுகளையும் சிதறடிக்கும் வேலைத் திட்டமே இந்த கணக்கு வாக்கெடுப்பாகும் என்று கூறியுள்ளது.

2010 ஆம் ஆண்டுக்கான வரவு செல வுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாத நிலையில் கடந்த நவம்பர் மாதத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கணக்கு வாக்கெடுப்பு ஒன்றையே நடத்தியது. புதிய அரசாங்கம் அமைத்ததன் பின்னர் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்பட்ட போதிலும் மீண்டும் கணக்கு வாக்கெடுப்பையே நடத்தப் போவதாகவும் எதிர்வரும் நவம்பர் மாதத்தின் பின்னர் வரவு செலவுத்திட் டத்தை சமர்ப்பிக்கவிருப்பதாகவும் அரசாங்கத் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி.யான தயாசிறி ஜயசேகர கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில், அரசாங்கம் மீண்டும் மீண்டும் மக்களை ஏமாற்றிக்கொண்டிருப்பது பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் எமக்கு கவலை அளிக்கின்றது. யுத்தம் உக் கிரமடைந்திருந்த காலகட்டத்தில் மக்கள் வயிற்றை இறுக்கிக் கொண்டு நாட்களைக் கடத்தி வந்தனர். யுத்தம் நிறைவடைந்ததும் நிம்மதியடைய முடியும் என்றும் நிவாரணங்களுடனான சக வாழ்வைக் கொண்டு நடத்த முடியும் என்ற அபிலாஷையிலும் திளைத்திருந்தனர்.

ஆனாலும் அரசாங்கத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளும் மக்களை ஏமாற்றமடையச் செய்கின்ற அதேவேளை ஒருவித விரக்திக்குள்ளும் தள்ளி விட்டுள்ளது. உண்மையில் மக்கள் படும் துன்பங்களை, வேதனைகளை அரசாங்கம் கண்டு கொள்ளாதிருப்பதே வேதனையளிக்கின்ற விடயமாகும் என்றார். (2-4)


உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு

மலேசியா

MALAYSIA

உற்பத்தி தொழிலாளர்கள்

Electronic Factory Workers

ஆசியாவில் உள்ள அழகுமிக்க நாடாகிய மலேசியாவிற்கு உற்பத்தி தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். இது சிங்கப்பூரை தலைமையமாகக் கொண்ட பிரபல்யமான கம்பனி.

வெற்றிடங்கள் 50 ஆண்கள்

Core business is Design, Manufacture and Distribution of FPCS and PCB & Turnkey Component , Assembly Services for FPCs.

**This is a ISO 9002 Certified Company.**

மாத சம்பளம் RM650.00 (1RM@ ரூபா.34/-)

மேலதிக வேலை நேரம் (Over Time) கொடுப்பனவும் உண்டு

| | | | |
|---|---|---|---|
| 8 Hours Duty | = RM 546.00 | Over Time Rates | |
| Special Allowance for Food | = RM 52.00 | Normal working days - per hour | = RM 4.68 |
| Attendance Allowance | = RM 52.00 | Sunday - per hour | = RM 6.25 |
| Monthly Salary | = RM 650.00 | Special holidays - per hour | = RM 9.37 |

ஒரு நாளைக்கு சராசரியாக 3 மணித்தியாலங்கள் ஓவர்ரைம் செய்தால் RM 4.68 x 3 = RM 14.04

26 நாட்களுக்கு 3 மணித்தியாலங்கள்படி ஓவர்ரைம் செய்தால் RM 14.04 X 26 = RM 365.04

| | |
|---|---|
| Basic salary | = RM 650.00 + |
| Over Time | = RM 365.00 |
| Total Monthly Income | = RM 1015.00 |

மாத மொத்த வருமானம் இலங்கை ரூபா

RM 1015 x ரூபா.34.00 = ரூபா.34,510/-

மலேசியா அரசாங்க வரி (Government Levy) அறவிடப்படமாட்டாது.

வயது: 21+ தொடக்கம் 32 வரை.

ஒப்பந்தக்காலம் 3 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது)

தயவுசெய்து இங்கு குறிப்பிடும் தொலைபேசி மூலம் எமது MR.R.Guna (குணா) என்பவருடன் தொடர்பு கொண்டு எமது கம்பனிக்கு நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு வரவும்.

மொபைல்: 077-826 3228 (யாழ்ப்பாணம்).

நேர்முகப் பரீட்சை மே மாதம் 3, 4, 5ம் திகதிகளில் நடைபெறும்.

Interviews on 3rd, 4th & 5th May, 2010

நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்கள் உடனடியாக கொழும்பில் மெடிகல் ரெஸ்ட் (Medical Test) செய்ய வேண்டும். கொழும்பில் உள்ள மலேசிய உயர்ஸ்தானிகராலயத்தால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவனத்தில் மட்டுமே மெடிகல் செய்யலாம். தொழில் விசா எடுப்பதற்கு மெடிகல் ரெஸ்ட் ரிப்போட் அவசியம். வரும்பொழுது தங்களது பாஸ்போட் மற்றும் 10 பாஸ்போட் அளவு கலர் போட்டோ (White Background) உடன் வரவும்.

**Terms & Conditions**

Free Accommodation, Food allowance is included in the salary & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three (3) years (Renewable). Other terms & conditions will be as per Malaysian Government Labour Laws.

கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், மலேசியா, குர்திஸ்தான் மற்றும் பல நாடுகளுக்கும் சிறந்த கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

TRANSSTAR

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,

375, Second Floor, Dam Street, Colombo 12.

(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)

Tel: 011 - 2 386 824 Mobile: 077-826 3228


S.L.Bureau Labour Licence : 1311.

S.L.Bureau Approval AL/1311/Advt/03/10.

(Near Hulftsdorp Courts - Colombo)

(ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)

(டாம் வீதியில் உள்ள ஹல்ஸ்டொர்ப் தபால் நிலையத்திற்கு அடுத்த கட்டிடம்)



யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் கோயிலில் அண்மையில் நடைபெற்ற இராசையா ஸ்ரீதரனின் மணிவிழாவில் நயினை நாகபூசணி அம்பாள் தேவஸ்தான அறங்காவலர் சபைச்செயலாளர் க.சரவணபவன் மணிவிழா நாயகருக்கு பொன்னாடைபோர்த்தி கௌரவிப்பதையும் ஸ்ரீதரன் ஏற்புரை நிகழ்த்துவதையும் கௌரவிக்கப்பட்ட மணிவிழா தம்பதிகளையும் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலய விகிர்தி வருஷ வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் இரவு சப்பறமும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் மகாயாக கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளதுடன் தொடர்ந்து திருநாவுக்கரச நாயனாரின் குருபூசை தினமும் மாலை கொடியிறக்கமும் அத்துடன் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் சங்காபிஷேகமும் இரவு திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது. (4)

## உலக புவி தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகம் நடத்தும் விழிப்புணர்வு கண்காட்சியும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

உலக புவிதினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகம் நடத்தும் விழிப்புணர்வுக் கண்காட்சியும் கருத்தரங்கும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ் நாவலர் வீதியிலுள்ள தியாகி அறக்கொடை நிறுவனத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகவும் யாழ்பல்கலைக்கழக புவியியற் துறை விரிவுரையாளர் என்.பிரதீபராஜா சிறப்பு விருந்தினராகவும் தியாகி அறக்கொடை நிறுவன பணிப்பாளர் செ.கமலநாதன் கௌரவவிருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளதுடன் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் என்.பிரதீபராஜா பூகோளவெப்பமடைதலும் காலநிலை மாற்றமும் தொடர்பான புவிதினசிறப்புகருத்தரங்கை நிகழ்த்த வுள்ளார்.

அன்றைய தினம் பாடசாலை மாணவர்கள் மற்றும் துறைசார் ஆர்வலர்கள் சமூக சூழலியலாளர்கள் ஆகியோரை பங்கு பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (2-30)

## பொதுக்கூட்டம்

(அல்வாய்)

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுறவு கூட்டுறவுச் சங்கத்தின் 23 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கத்தலைவர் சோ.கங்காதரன் தலைமையில் சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரேரணைகளை சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் கிடைக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு சங்கச் செயலாளர் சு.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (2-4-19)




## புதிய யோகாசன பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் சிவானந்த மகரிசி யோகா நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்தமட தியான மண்டபத்தில் புதிய யோகாசன வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி வகுப்பில் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ளலாம் எனவும் நோயாளர்களுக்கு தனியான பயிற்சிகள் வழங்கப்பட்டுவருவதாகவும் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு வேதாந்த மடத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் அன்றையதினம் காலை 6.30 மணிக்கு தியானம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்படவுள்ளதால் இதில் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என நிலையபொருளாளர் அறிவித்துள்ளார். (2-4)

## தென்பகுதி மக்கள் அனுபவிக்கின்ற சமாதானசூழலை வடபகுதி மக்களும் அனுபவிக்க வேண்டும்

### கொழும்பு பங்குச் சந்தை தலைவர் நிகால் பொன்சேகா உரை

(யாழ்ப்பாணம்)

யுத்தம் அற்ற சூழல் தென்பகுதி மக்களுக்கு கிடைப்பதைப் போன்று வட பகுதி மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் அரசாங்கமும் நாமும் ஆவலுடன் இருக்கின்றோம் என கொழும்பு பங்குச் சந்தை தலைவர் நிகால் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு பங்குச் சந்தையின் 5ஆவது கிளையினை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நேற்று திறந்து வைக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இன்று கொழும்பு பங்குச் சந்தை வட மாகாணத்தின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் தனது 5 ஆவது கிளையினை ஆரம்பிப்பதையிட்டு மிகவும் மகிழ்வாக உள்ளது.

கொழும்பு பங்குச்சந்தை 2004ஆம் ஆண்டளவில் நான்கு பங்குதாரர்களுடன் தனது சேவையினை யாழ்ப்பாண முதலீட்டாளர்களுக்கு இங்கு வழங்கியிருந்தது. அன்றைய காலங்களில் இருந்து வந்த அமைதியின்மைச் சூழல் தொடர்ந்து இயங்குவதற்கு கை கொடுக்கவில்லை. அதனால் எமது நடவடிக்கைகளை 2007 ஆம் ஆண்டில் இடை நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இயல்பு நிலையினை தோற்றுவிக்க வேண்டும் என்ற திடசங்கற்பத்தில் இப்பிராந்தியத்தில் அமைதி தோற்றுவிக்கப்பட்டது. வைபவரீதியாக மீள் திறக்கும் இன்றைய நிகழ்வு மேலும் இயல்பு வாழ்க்கையை கோடிட்டுக் காட்டும் நிகழ்வாக அமையும் என்று கூறலாம்.

கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட 230 கம்பனிகள் உள்ளன. வடபிராந்தியத்தில் இருந்தும் எதிர்காலத்தில் பட்டியல் இடப்பட்ட கம்பனிகள் உருவாகும் என நம்புகிறோம். அது நிறைவேற நீண்ட காலம் தேவையில்லை. நீண்ட ஆண்டுகளாக வடமாகாண மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்கள், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலான வாழ்க்கை நிலைமைகளில் இருந்து வெளியேறுவதற்கு நிச்சயமாக இச் சந்தர்ப்பத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்பதில் நாங்கள் அசையாத நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

நாடளாவிய ரீதியில் இயங்கிவரும் 4 பங்குச் சந்தை கிளைகள் எமது மொத்த வருமானத்தில் 5சதவீதத்தினை வழங்கி வருகிறது. இது 2010ஆம் ஆண்டில் 6 சத வீதம் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணக் கிளையின் பங்களிப்பும் எமக்கு காத்திரமான ஒன்றாக அமையும் என பலமாக நம்புகிறோம் என்றார். (2-7)

## குழுக்கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தி திட்ட உருவாக்கல் குழு கூட்டம் எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வடக்குதிட்டமிடல் குழு இணைப்பாளர் அ. அ.நடராஜா அறிவித்துள்ளார். (2-4-19)

## வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தின் மேதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தின் தொழிலாளர் தினம் எதிர்வரும் 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் யாழ்.மாவட்டக்கிளை தலைவரும் தலைமைச் செயலக உபதலைவருமான கணேசன் கம்ஸ நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ் தொழில் திணைக்கள உதவி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் மற்றும் சங்கத்தின் வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்கு உட்பட்ட மாவட்டங்களின் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

மேலும் இந்நிகழ்வில் சங்கத்தின் இணையத்தளம் உத்தியோகபூர்வமான முறையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன் ஓய்வு பெற்ற சங்கத்தின் மூத்த உறுப்பினர்களை கௌரவித்தல் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து சங்கத்தினால் அங்கத்தவர்களுக்கு கடன் திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (2-4)

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

இல. 31 ,குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைக்கப்பட்டுள்ள ஜெயதீபம் முதலீட்டு நிறுவன திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நிறுவனத்தலைவர் ஆர்.ரவீந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கே.கஜேந்திரன், யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி எம்.வசந்தகுமார், நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-4)

# மௌனகுரு முருகுப்பிள்ளை சுவாமிகள் (செல்வச்சந்நிதி கடவுள் சுவாமிகள்)

ஈழத்து சித்தர் பரம்பரையை சேர்ந்தவரே மௌனகுரு சுவாமிகள். மௌனியாக இருந்து அருள் விளக்கம் செய்தமையால் மௌனகுரு சுவாமிகள் என்றும் எல்லோரிடமும் கடவுளைக்கண்டு தொழுதமையால் கடவுள் சுவாமிகள் என்றும் தகரமடத்தில் இருக்கை கொண்டமையால் தகரமடம் சுவாமிகள் என்றும் அழைக்கப்பட்டார். வெண் துகில் ஆடையும் செம்மேனியில் உத்தூளனமாகப் பூசிய திருநீற்றின் ஒளியுடனும் நெற்றித் திலகம், நரைத்த தாடி, பின் குடும்பியுடனும் காட்சியளிப்பார்.

சாதுக்களின் இருக்கைகளும் சமாதிகளும் நிரம்பப் பெற்ற செல்வச்சந்நிதி கோயிலுக்கு வடக்கே அமைந்தது தான் தகரமடம். சுவாமிகளின் இருப்பிடமாகிய தகரமடத்தில் அவருடைய குருநாதர் சின்னத்தம்பி சுவாமிகளின் படமொன்றும் அருகே தாளையன் சுவாமிகளின் படமும் ஒரு திருவோடும் குடையும் கற்பூரமும் வீபூதியும் எப்பொழுதும் காணப்படும். இவையே சுவாமிகள் தம்முடன் வைத்துக் கொள்ளும் பொருட்களாகும்.

சுவாமிகள் இல்லறத்தில் இருந்து துறவு மேற்கொண்டு இறைபதம் அடைந்தவர். *எத்தொழிலைச் செய்தாலும் ஏதவஸ்தைப் பட்டாலும் – முத்தர் மனமிருக்கும் மோனத்தே* என்ற சித்தர் வாக்கிற்கமைய வாழ்ந்து காட்டியவர். இவர் வடமறவர் வாழ்ந்த பிரதேசமான அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவ்ர். கந்தர்- கணபதிப்பிள்ளைக்கும் இலக்குமிப் பிள்ளைக்கும் இளைய மகனாக 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி அவதரித்தார். இவரது அவதாரத்தால். வடபிரதேசம் புனிதமடைந்தது. இவருக்குப் பெற்றோர் முருகுப்பிள்ளை என்ற திருநாமம் சூட்டினர். கருவிலேயே திருவுடைய முருகுப்பிள்ளை இறைவனைப் பக்தி பண்ணுவதிலும் தியானமிருப்பதிலும் சாதனையாளராக விளங்கினார். வர்த்தகத் தொழிலை மேற்கொண்டு பிரபல வர்த்தகராகவும் விளங்கினார். இலங்கையின் பல பாகங்களிலும் இவரது வர்த்தக நிலையங்கள் பிரபலமடைந்து காணப்பட் டன.

இவர் தமது 24 ஆம் வயதிலேயே முறைப் பெண்ணான பார்வதிப்பிள்ளையைத் திருமணம் செய்து கொண்டார். இல்லறவாழ்வில் ஆறு புத்திரர்களையும் மூன்று புத்திரிகளையும் பெற்றெடுத்தார். இல்லற தர்மங்களில் வழுவாது நடந்த முருகுப்பிள்ளை துறவற வாழ்விற்குத் தன்னை அர்ப்பணித்தார். மனைவி, மக்கள், பொருள் பண்டம், சுற்றமும், பற்றும் விட்டார். பற்றற்ற துறவியானார். திருமுறைகள் ஓதுவதிலும் தியானமிருப்பதிலும் மெய்யடியார் கூட்டத்தை நாடுவதிலும் ஞான சற்குருவைத் தேடுவதிலும் இவரது நாட்டமெல்லாமிருந்தது.

ஞானதாகம் கொண்ட இவர் அடிக்கடி பாரத நாடு செல்வார். இதனால் ரமண மகரிஷிகள் போன்ற ஞானிகளின் தொடர்பு இவருக்குக் கிடைத்தது. சிதம்பரம் பொன்னம்பலம் சுவாமிகளுடைய தொடர்பு கிடைத்தது.


## சுவாமிகளது 105 ஜெயந்தி தினத்தை முன்னிட்டு இக்கட்டுறை பிரசுரமாகின்றது

அவரது தொண்டனாகப் பலகாலம் அவருடன் தங்கி இருந்தார். ஞான குருவை அடைவதற்குரிய பக்குவத்தை முருகுப்பிள்ளை அடைந்து விட்டார். இதனையுணர்ந்த பொன்னம்பலம் சுவாமிகள் ஞானகுருவைப் அடைவதற்குரிய வழியை முருகுப்பிள்ளைக்கு உணர்த்தினார். உனது குரு உனது ஊரிலிலே தான் உள்ளார். நீ அவரை அண்டி ஆன்ம ஈடேற்றம் பெறுவாய் என்று அருள் வாக்குக் கூறி செல்வச்சந்நிதி சின்னத்தம்பி சுவாமிகளிடம் அனுப்பிவைத்தார்.

ஈழத்து சித்தர் பரம்பரை ஒன்று கடையிற் சுவாமிகள் காலந்தொட்டு வளர்ந்து வந்துள்ளது. கடையிற் சுவாமிகளின் முதற் சீடராக விளங்கியவர் செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளைக் குருவாகக் கொண்டவர் பலர். அவர்களில் முதன்மையானவர் சிவதொண்டன் நிலைய ஸ்தாபகர் சிவயோகர் சுவாமிகள். இரண்டாமவர் குழந்தைவேற் சுவாமிகள். குழந்தைவேற் சுவாமிகளைக் குருவாகக் கொண்டவர் சின்னத்தம்பி சுவாமிகள். சின்னத்தம்பி சுவாமிகளின் 96 சீடர்களில் முதற் சீடராக விளங்கியவர் மௌனகுரு முருகுப்பிள்ளை சுவாமிகளாவர். இவர் சின்னத்தம்பி சுவாமிகளைக் குருவாக அடைந்தது முதல் அவர் சமாதி ஆகும்வரை அவருடனே இருந்து பணிவிடைகள் செய்து அருளுபதேசமும் பெற்றார்.

1976 இல் இருந்து நித்திய மௌன விரதத்தை மேற்கொண்டார். தன்னை நாடி வரும் அடியவருக்கு வேண்டுபதேசங் களும் ஆசியும் நல்கினார். இதன் பேறாக வறுமை, நோய், பிணி, தீர்ந்தோர் பலர். திருமணமானோர் பலர். தொழில்வளம் பெற்றோர் பலராவர். இம்மையிலும் மறுமையிலும் நல்வாழ்வு வாழ வழிகாட்டினார். எழுத்து மூலமே அருளுபதேசமும் நல்கப்பெற்றது.

இவரது குருநாதர் மறவன்புலோவைச் சேர்ந்தவர். இவர் 1940 இல் சமாதி அடைந்தார். அவரது சமாதி மறவன்புலோவிலேயே அமைக்கப்பட்டது. குருவினுடைய் குருபூசையை முருகுப்பிள்ளை சுவாமிகள் மிகப் பக்தி சிரத்தையுடன் 40 ஆண்டுகள் தவறாது செய்து வந்தார். நாற்பதாவது குருபூசை நிகழ்ந்து நாலாம் நாளே சிஷ்யனும் சமாதி அடைந்தமையும் குருவின் சமாதி அருகே சிஷ்யனுக்கும் சமாதி அமைந்தமையும் வியப்பாகும்.



சுவாமிகளின் ஒரு குறிப்பில் ***அன்பும் அறமும் தவமும் விரும்பும் சாதுக்கள் தேவை*** என்றும் அவர்களை மறவன்புலோவுக்கு வரும்படியும் உண்டியும் உறைவிடமும் உண்டு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. குருநாதரினால் ஸ்தாபிக்கப்பட்ட ***சுத்த, சிவ, சமரச, சன்மார்க்க, சாது சங்கத்தை*** தொடர்ந்து நடத்தினார். ஆன்மீக நெறியில் வாழ வழிகாட்டி நின்று சுவாமிகள் 1980 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் மகாசமாதி கூடினார்கள். அவரது சிஷ்யர்களினால் சுவாமிகளது குருபூசை தினமும் ஜெயந்தி தினமும் கொண்டாடப்பட்டு வருகிறது.

**திருமதி.வை.கணேசபிள்ளை**
**இணுவில்**

---

# அமைச்சுப்பொறுப்புக்கள் தொடர்பான வர்த்தமானி அடுத்தவாரம்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சுக்களின் பொறுப்புக்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரம் வெளியிடப்படவிருப்பதாக பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தமது அமைச்சுப்பொறுப்புக்களை பொறுப்பேற்கும் வைபவத்தில் கலந்துகொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அமைச்சுப்பதவிகள் வழங்கப்பட்டுள்ள போதும் அதற்கான பொறுப்புக்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. இந்த வாரம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகவுள்ளது.

இதன் போது அமைச்சர் பௌசிக்கு கூடுதல் பொறுப்புக்கள் வழங்கப்படும் என்று நம்புகிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (2-4)

# 30 வருடங்களின் பின் இலங்கையில் 2011 இல் சனத்தொகை கணக்கெடுப்பு

முப்பது வருடங்களுக்குப் பின்னர் இலங்கை முழுவதிலும் சனத்தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு இந்தப் பணிகளை முடிக்கத் திட்டமிட்டுள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்கள இயக்குநர் நாயகம் டி.பி.பி.எஸ்.விஜயரத்ன தெரிவித்தார்.

1981 ஆம் ஆண்டு நாடு பூராகவும் சனத்தொகை கணக்கெடுப்பு முதன் முதலில் மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக பத்து (10) வருடங்களுக்கு முன்னர் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரங்கள் கணக்கெடுக்கப்பட்டன.

எனினும் அது நாடு முழுவதும் நடத்தப்படவில்லை. அப்போது புலிகளின் கட்டுப்பாட்டுக்கு கீழ் இருந்த பகுதிகளில் கணக்கெடுப்பு நடத்த முடியாமல் போனதையிட்டே நாடும் முழுவதிலும் இந்த கணக்கெடுப்பு நடத்த முடியாமல் போனது என்றும் அவர் கூறினார்.

அந்த வகையில் 30 வருடங்களுக்குப் பின்னர் நாடு முழுவதும் நடத்தப்படும் முதலாவது கணக்கெடுப்பு இதுவாகும்.

இந்நிலையில் கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள வீடுகள் மற்றும் அங்கு வசிக்கும் மக்களின் எண்ணிக்கை என்பவற்றைச் சேகரிப்பதுடன் தொடர்புடையதான ஆரம்பப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சனத்தொகை கணக்கெடுப்புக்கென திணைக்களம் தற்போது தேவையான வரைபடத்தையும் வீட்டு விபரங்களையும் சேகரித்து வருவதுடன் கணக்கெடுப்பு தொடர்பிலான அறிவுரை செயல்திட்டம் பதினொரு மாவட்டங்களில் ஆரம்பித்துள்ளதுடன் குறுகிய காலத்தில் ஏனைய மாவட்டங்கிலும் நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கணக்கெடுப்பைச் சரியாக மேற்கொள்வதற்கு வேண்டிய ஒத்துழைப்பை உள்ளூர் பணியாளர்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் வழங்க வேண்டும் என்று திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

சனத்தொகைக் கணக்கெடுப்புத் தொடர்பில் புதிய மென்பொருள் ஒன்றை திணைக்களம் அண்மையில் உருவாக்கி இருந்தது. இதன் மூலம் கிராம சேவகர் பிரிவுகளில் வறுமைக்கோட்டுக்குக்கீழ் வசிப்பவர்களின் உண்மையான நிலைவரத்தை அறிந்துகொள்ள முடியும் என்று திணைக்கள இயக்குநர் மேலும் தெரிவிக்தார். (2-4)

# திறமையானவர்கள் எங்கிருந்தாலும் இனங்கண்டு ஊக்குவிக்கப்படுவார்கள்

## விளையாட்டுத்துறை அமைச்சர்

விளையாட்டுத்துறையில் திறமை மிக்கவர்கள் நாட்டின் எந்தப் பாகத்தில் இருந்தாலும் அவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து உலகறியச் செய்வதே விளையாட்டுத்துறை அமைச்சின் பொறுப்பாகும்.

அதன் அடிப்படையில் இப்புதிய அமைச்சினை சவாலாக ஏற்றுக்கொண்டு சிறப்பாக முன்னெடுத்துச் செல்வேன் என விளையாட்டுத்துறை அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.

தனக்குக்கிடைக்கப்பெற்ற புதிய அமைச்சுப் பதவி தொடர்பாகக் கருத்துத்தெவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் கடந்தமுறை எனக்குக் கிடைத்திருந்த கால்நடை அபிவிருத்தி அமைச்சிற்கும் தற்போது கிடைத்திருக்கும் அமைச்சிற்கும் இடையில் பாரிய வித்தியாசம் உள்ளது. இருந்த போதிலும்அவ்அமைச்சினூடாக பெற்றுக் கொண்ட அனுபவங்களைப் பயன்படுத்திக்கொண்டும் மேலும் பல நவீன யுக்திகளுடன் புதிய அமைச்சினை முன்னெடுத்துச் செல்வேன்.பல்வேறு விளையாட்டுக்களில் இருந்து திறமையான வர்களைத் தெரிவு செய்யும் போது இன,மத மற்றும் பிரதேச பாகுபாடின்றி திறமை மற்றும் இலங்கையர் என்ற விடயங்களே கருத்தில் கொள்ளப்படும். எனவே திறமையானவர்கள் நாட்டின் எந்தப் பாகத்தில் இருந்தாலும் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நிச்சயமாக அவர்கள் தெரிவு செய்யபடப்படுவார்கள் என்றார். (2-4)


# VACANCIES

நாவற்குளி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**Course Counsellor - Female - 2 Positions**

> Should be a confident individual with pleasing personality, good command in English language and computer literacy is essential, Age between 19-23 years, School leavers also considered. Training will be provided (கொழும்பிலும் பயிற்சிகள் வழங்கப்படும்).

**Student Relation Officer - Female - 2 Positions**

> The applicant should possess a good pass in G.C.E. A/L, Basic Computer Knowledge is essential. Age between 19-23 years, School leavers also considered. Training will be provided (கொழும்பிலும் பயிற்சிகள் வழங்கப்படும்).

**Computer Instructor - Female - 3 Positions**

> The applicant is expected to teach Office Package, Graphic Design, DTP, C, C++, Visual Basic, Java, Quick Books, Tally, Information Technology, Web Design & Development. Recognised Advanced Diploma Holders with good English knowledge can Apply, Training will be provided.

**Computer Lecturer - Female - 2 Positions**

> The applicant is expected to teach Computer Programming, Web Design, Tally Accounting, Hardware & Networking, Multimedia Subjects.

**Apply with in 7 days**

**ASIAN - CSC COMPUTER EDUCATION**

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

# களம் பல கண்ட யாழ் கோட்டை 17

# ஈழயுத்தம் – 1


**04 பெப்ரவரி 1948**

இலங்கையைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திய ஆங்கிலேயர் சிங்களப் பேரினவாதிகளிடம் கையளித்துவிட்டு அகன்றனர். அன்றிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அவிழ்த்துவிடப்பட்டன. 1948 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவழித் தமிழரின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. 1949 இல் அகில இலங்கைக் காங்கிரசிலிருந்து விலகிய எஸ்.ஜே. வி.செல்வநாயகம் சமஷ்டிக் கட்சியைத் தொடங்கினார். 1951 இல் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிய எஸ். டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சியைகைப் பற்றும் நோக்குடன் ஆரம்பித்தார். 1952 இல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்க இறக்க டட்லி சேனநாயக்க பிரதமரானார். 1953 இல் டட்லி சேனநாயக்க அரசியல் நெருக்கடி காரணமாகத் தனது பதவியை ராஜினாமா செய்ய சேர்.ஜோன் கொத்தலாவல பிரதமரானார். அவர் பிரதமரான அடுத்த வருடமே (1954) யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ண வருகை தந்தார். கொக்குவிலில் நிகழ்ந்த கூட்டத்தில் சிங்களமும் தமிழும் அரசமொழிகளாகும். தமிழுக்கு சம அந்தஸ்து என்று வாக்குறுதியளித்தார்.



யாழ்ப்பாணக் கோட்டை இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தது. அவ் வேளை யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பொலிசாரின் விடுதிகளும் சிறைசாலையும் இயங்கி வந்தன. அரச விருந்தினர், உயர் அதிகாரிகள் வந்து தங்கும் மாளிகையாக *குயின்ஸ் ஹவுஸ்* விளங்கியது. வேறெவ்வித முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் யாழ்ப்பாணக் கோட்டை ஆட்படவில்லை.

சேர்.ஜோன் கொத்தலாவலவின் வாக்குறுதிக்கு மாறாக S.W.R.D பண்டாரநாயக்க சிங்களமட்டும் என்ற இனவாதக் கொள்கையை ஆட்சியைக் கைப்பற்றும் துரும்பாகப் பிடித்துக் கொண்டார். சேர்.ஜோன் கொத்தலாவல கொக்குவில் வாக்குறுதியைக் கைகழுவியும் பண்டாரநாயக்கவை ஆட்சிக்கு வராது தடுத்துவிடமுடியவில்லை. 1956 இல் பண்டாரநாயக்க பிரதம மந்திரியாகப் பதவியேற்று இருபத்திநான்கு மணி நேரத்துள் சிங்களம் மட்டும் சட்டத்தை காலி முகத்திடலில் சத்தியாக்கிரம் செய்த தமிழரின் இரத்தத்தின் சாட்சியத்தில் நிறைவேற்றினார். அதன் பயனாக தமிழருக்கு எதிரான வகுப்பு வாதக் கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது.



பண்டா –செல்வா ஒப்பந்தம்

1957 இல் பண்டாரநாயக்க – செல்வ நாயகம் ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதனை எதிர்த்து ஜே.ஆர்.ஜயவர்த்தன கண்டிக்குப் பாதயாத்திரை நடத்தினார். அதேவேளை பண்டாரநாயக்க ஆட்சியில் சுகாதார அமைச்சராகவிருந்த விமலா விஜயவர்த்தன பௌத்த பிக்குகளோடு பிரதமரின் இல்லத்திற்கு ஊர்வலம் சென்று அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறியவைத்தார். 1958 இல் இலங்கையில் முன்னெப்போதுமில்லாத விதமாகத் தமிழருக்கு எதிரான வகுப்பு வாதக் கலவரம் வெடித்தது. எல்லாமாகச் சேர்த்து திரண்டு 1959 இல் பண்டாரநாயக்க தான் உருவாக்கிய வன்முறைக் கலாசாரத்திற்கே பலியாகினார். பிரதமர் தனது இல்லத்தில் வைத்து பிக்கு ஒருவனால் சுடப்பட்டு இறந்தார். 1960 இல் இலங்கையின் முதலாவது விதவைப் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியிலேறினார்.

இவ்வளவு வரலாற்று நிகழ்ச்சிகளையும் யாழ்ப்பாணக் கோட்டை உள்வாங்கி நிமிர்ந்து மோனத்தில் நின்றது. அதன் அமைதியையும் யாழ்ப்பாண மக்களது நிம்மத் தியையும் குலைக்கின்ற நிகழ்ச்சி 1961 ஆம் ஆண்டு நிகழ்ந்தேறியது.

**20, பெப்ரவரி 196. ,**

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டக் கச்சேரிகளின் முன் குழுமி நிர்வாகம் நடை பெறாது தடுத்து சாத்வீக முறையில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர். தமிழ்ப் பிரதேசத்தின் மக்கள னைவரும் உணர்வு பூர்வமாக இதில் கலந்து கொண்டனர். தமிழ் மக்களின் சுய அரசாட்சியை வலியுறுத்தும் குறியீடாக தமிழரசு தபாற்சேவை ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. இச் சத்தியாக்கிரகம் 18 ஏப்பரல் 1961 வரை பெரும் இயக்கமாக நிகழ்ந்தது. இதனை முறி யடிப்பதற்காக இராணுவம் முதன் முதலாக வடக்கே அனுப்பப்பட்டு நிலை கொண்டது.

01, மார்ச், 1961 ஆம் திகதி பலாலி விமான நிலையத்தில் ஸ்ரீ லங்கா இராணுவ வீரர்கள் இறக்கப்பட்டனர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசு இரத்மலான விமானத் தளத்திலிருந்து இராணுவ வீரர்களை அனுப்பிவைத்திருந்தது. கடற் படைக் கப்ரின் ராஜன் கதிர்காமர் தலைமையிலும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வண்டென் பேர்க் தலைமையிலும் கடற்படையினரும் பொலிசாரும் யாழ்ப்பாணத்தில் நிலைகொண் டனர்.

02 மார்ச் 1961 அதிகாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மெயில் றெயினில் கேர்னல் உடுகம தலைமையில் இன்னொரு தொகுதி இராணுவம் வந்து இறங்கியது. இவர்கள் உடனடியாக யாழ்ப்பாணக் கோட்டைக்கு வந்து தங்கினர்.

17 , ஏப்ரல் 1961 காலை வேளையில் 350 இராணுவ வீரர்களையும் 15 இராணுவ அதிகாரிகளையும் சுமந்தபடி ஒரு விசேட புகையிரதம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. இவர்களோடு கோட்டையில் ஏறத்தாழ 600 இராணுவ வீரர்கள் சேர்ந்து விட்டனர். 18 ஏப்பிரல் அதிகாலை சத்தியாக்கிரகிகள் அடித்து உதைத்து தாக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டனர். அன்றிலிருந்து இரு நாட்கள் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்பட்டு யாழ்ப்பாணப் பொது மக்கள் பலர் தாக்கப்பட்டனர். சமஷ்டிக் கட்சிப் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் முக்கிய ஆதரவாளர்களும் இரவோடிரவாகக் கைது செய்யக்பட்டு ஆறுமாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

**செங்கை ஆழியான்**

அன்று யாழ்ப்பாணக் கோட்டைக்கு வந்த ஸ்ரீலங்கா இராணுவம் பின்னர் தொடர்ந்து அங்கு அடிக்கடி முகாமிட்டுக் கொண்டது. சுதந்திர உணர்வு கொண்ட தமிழ் மக்களை என்றும் அடக்கிவைத்திருப்பதற்கு நிரந்தர இராணுவ முகாம்கள் அவசியமானவை எனச் சிங்கள அரசு கருதத்தொடங்கியது.

1962 ஆம் ஆண்டு அரசுக்கு எதிராக இராணுவ –பொலிஸ் சதி ஒன்று நிகழவிருந்தது. அச்சதி அம்பலமாகியதால் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலர் யாழ்ப்பாணக் கோட்டை மறியற்சாலையில் சிறை வைக்கப்பட்டனர்.

(தொடரும்)

# சிவப்பு மழை திரைப்படத்திற்கு இலங்கையில் தடை விதிப்பு




(கொழும்பு)

கின்னஸ் சாதனைக்காக 12 நாட்களில் உருவாக்கப்பட்ட சிவப்பு மழை திரைப் படத்திற்கு இலங்கை தடைவித்துள்ளது.

இந்த திரைப்படம் உலகிலேயே மிக குறைந்த நாட்களில் தயாரான முழுநீள பொழுதுபோக்கு திரைப்படமாகும். இந்த படத்தில் சுரேஷ் ஜோகிம், மீராஜாஸ்மின் ஆகிய இருவரும் கதாநாயகன் கதாநாயகியாக நடித்துள்ளனர். கிருஷ்ணமூர்த்தி படத்தை இயக்கியுள்ளார்.

இலங்கை இராணுவத்தால் பாதிக்கப்பட்ட ஒரு இளைஞன் தமிழ்நாட்டுக்கு வந்து மத்திய மந்திரியின் மகளை கடத்தி தனது கோரிக் கையை நிறைவேற்றிக்கொள்வது போன்ற கதை படத்தில் இடம்பெற்றுள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட இந்த படம் தற்போது தமிழ்நாடு முழுவதும் திரையிடப்பட்டுள்ளது. (2-4)

# வடக்கு புனரமைப்புபணிகளுக்காக உலக வங்கி 100 மில்லியன் ரூபா உதவி

(கொழும்பு)

வடக்கின் புனரமைப்பு பணிகளுக்காக உலக வங்கி 100 மில்லியன் ரூபாவினை கடனுத வியாக வழங்கத் தீர்மானித்துள்ளது.

தெல்லிப்பளை மற்றும் உடுவில் பிரதேசங்களில் மூவாயிரம் குடும்பங்களை மீள் குடியேற்றுவற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

பலாலி உயர் பாதுகாப்பு வலயங்களை அண்மித்த பகுதிகளில் மக்கள் மீள் குடியேற்றப்படவுள்ளனர்

இதற்கமைய வடிகாலமைப்பு திட்டங்களும் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளதாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் கே.விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் மீள் குடியேற்றப்படும் மக்களுக்கு கடனுதவிகளும் வழங்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-4)

# 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் இரத்து செய்யப்பட வேண்டும்

## கெமுனு விஜேரட்ன கோரிக்கை

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்ட மூலம் இரத்து செய்யப்படவேண்டுமென இலங்கை தனியார் பஸ் போக்குவரத்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் காணப்படும் சில பொருத்தமற்ற சரத்துக்களினால் நாட்டின் போக்குவரத்துத் துறை பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மாகாணசபை முறைமையினால் போக்குவரத்து சேவைக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் பெறுவதில்லை என்றும் எவ்வாறெனினும் 13ஆம் திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு 17 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவதன் மூலம் தீர்வு காண முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (2-4)

# கொழும்பு றோயல் கல்லூரி

## கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை-2010

## வழிகாட்டல் பரீட்சை

**பொருளியல்-I-I** Economics *I*-I


*1 மணித்தியாலங்கள்* *1 Hours*

***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

01. மறைப் பொருளியல் கூற்றானது,
 1.வருமானத்துக்கும், கல்விமட்டத்துக்கும் இடையே நேர்க்கணிய தொடர்பு
 2.பணநிரம்பலுக்கும்,விலைமட்டத்துக்கும் இடையே நேர்கணிய தொடர்பு
 3.பொருளின் விலைக்கும்,கேள்வித் தொகைக்கும் இடையே எதிர்க்கணிய தொடர்பு
 4.பொருளின் விலைக்கும்,நிரம்பல் தொகைக்கும் இடையே நேர்க்கணிய தொடர்பு
 5.அரசாங்கம் குறைந்தபட்ச கூலியை அதிகரித்தல்

02.சமூகமானது கட்டாயம் பின்வருவனவற்றுள் எதனுடன் பயன்படுத்துவதால் வளங்களில் இருந்து உச்சபயனை பெற்றுக்கொள்ளும்,
 1. நிறைதொழில் மட்டத்துடன் 2. முழு உற்பத்தியுடன்
 3. உற்பத்தியி வினைத்திறனுடன் 4. வளங்களின் வினைத்திறனான ஒதுக்கீடு
 5. சமூக முன்னுரிமைப்படி

03. பின்வரும் கேள்வி வளையி, விலைக்கும் கேள்வி வளையிக்கும் இடையிலான தொடர்பை விளக்குகின்றது. வளையியின் சாய்வு விகிதம்





1 - 03.2
2 - 0.33
3 - 0.3
4 - 0.33
5 - 0.2

04. சந்தர்ப்பச் செலவு வளையி பற்றிய சரியான கூற்று,
 1. தெரிவு இருக்குமாயின் அமையச் செலவு உண்டு. ஏனெனின் இழக்கப்படும் பெறுமதி இருப்பதால்
 2.அமையச் செலவு ஒரு மெய் கருப்பொருள் அல்ல.
 3.தீர்மானத்தை மேற்கொள்ளும் மக்களுக்கு அமையச் செலவு மட்டுப்படுத்தப்பட் டுள்ளது.
 4.அமையச் செலவானது ஒரு கணியப்படுத்தக்கூடிய கருப்பொருள் அல்ல
 5.அமையச்செலவு பூச்சிய பெறுமதியை கொண்டிராது

05. கலப்பு பொருளாதாரத்தின் காரணிச் சந்தையில் அரச தொழிற்பாடானது,
 1. பொருட் சேவைகளை கொள்வனவு செய்தல்
 2. வீட்டுத்துறையின் மீது வருமானவரி அறவிடுதல்
 3. நுகர்வோருக்கு வரி மற்றும் மானியத்தை அறிமுகப்படுத்தல்
 4. குறைந்தபட்ச கூலியை நடைமுறைப்படுத்தல்
 5. மேற்கூறிய எவையுமல்ல


06. பின்வரும் வரைபானது நுகர்வில் எதிர்கணிய வெளிவாரிகளை விளக்குகின்றது.




மேற்கூறப்பட்ட வரைபின் படி மக்கள் சார்ந்த நோக்கில் உசிதநுகர்மட்டம் $Q_1$ ஆகவும், சமூகம் சார்ந்த நோக்கிய உசிதநுகர்வு மட்டம் $Q_0$ ஆகவும் உள்ளது . அரசாங்கம் $Q_1$ இலிருந்து , $Q_0$ வரைக்கும் நுகர்வு மட்டத்தை குறைப்பதற்கு,கட்டாயமாக,
 1. உற்பத்தி மீது வரி விதித்தல் வேண்டும்
 2. உற்பத்தி மீது மானியம் வழங்குதல்
 3. நுகர்வு மீது வரி விதித்தல் வேண்டும்
 4. நுகர்வு மீது மானியம் வழங்குதல்
 5. உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தல்

07 பின்வரும் சந்தை நிலைமைகளில் எதில் நிறுவனம் தொழிலும் ஒன்றாக இருக்கும்
 1. தனியுரிமை 2. சிலவுரிமை 3. நிறைவில் போட்டி
 4. நிறைபோட்டி 5. தனியுரிமை போட்டி

08. கீழே இரண்டு கேள்வி வளையிகள் $D_1$,$D_2$A என்னும் புள்ளியில் இடைவெட்டுகின்றன. $D_1$ மற்றும் $D_2$ கேள்வி வளையிகளின் புள்ளியில் வலைசார் கேள்வி நெகிழ்ச்சி யாது?





| $D_1$ ன் விலை நெகிழ்ச்சி | $D_2$ இன் விலை நெகிழ்ச்சி |
|---|---|
| 1 - 2.0 | - 0.5 |
| 2 - 0.5 | - 2.0 |
| 3 - 1 | - 1.0 |
| 4+0.5 | - 3.0 |
| 5 -0.8 | -0.2 |

09. விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி = 0.6
 விலைசார் கேள்வி நெகிழ்ச்சி = 0.4
 மேலுள்ள பண்டம் X மீது அரசாங்கம் 2/- வரியினை விதிக்கின்றது. வரிக்கு பின் X பண்டத்தின் சமநிலை விலையானது எவ்வாறு அதிகரிக்கும்.


 1.ரூபா 80வினால் 2.ரூபா 70 வினால் 3. ரூபா 1.70 வினால்
 4. ரூபா 1.20 5. ரூபா 1.50 வினால்

10. X பண்டத்தின் மீது அரசாங்கம் உயர்ந்த மட்ட விலை $P_1$ ஐ அமுல்படுத்தும். இவ் விலை $P_1$ இல் மிகை கேள்வி ஒதுக்கீடானது வினைத்திறனுள்ள பங்கீட்டில் திட்டம் ஆகும். நுகர்வோர் மேலதிக செலவீனங்கள் மேற்கொள்ள வேண்டி இல்லாதிருப்பின் நுகர்வோர் மிகை யாது?





1) A
2) A + B + C
3) A + B + C + D
4) A + B + D
5) A + F

11. நிறைபோட்டிச் சந்தையின் நிறுவனம் ஒன்றின் செலவு வளையிகள் கேள்வி வளையி கீழே தரப்பட்டுள்ளது.




இந் நிறுவனத்தின் இலாபம்
 1. ரூபா 100/=
 2. ரூபா 500/=
 3. ரூபா 600/=
 4.ரூபா 200/=
 5. ரூபா 300/=

12. எரிய பொருளாதாரம் ஒன்றின் இரு நுகர்வு வளையிகளை கீழுள்ள வரைபு விளக்குகின்றது.நுகர்வு வளையி C இலிருந்து $C_1$ற்கு நுகர்வதற்கான காரணம்




 1.தன்னிச்சையான நுகர்வில் அதிகரிப்பு
 2. நுகர்வு நாட்டத்தில் ஓர் அதிகரிப்பு
 3.நுகர்வு நாட்டத்தில் ஓர் குறைவு
 4.நுகர்வின் அதிகரிப்பு
 5.தன்னிச்சையான நுகர்வில் குறைவு

13. சந்தை கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளை பின்வரும் சமன்பாட்டால் விளக்கமுடியும்.

$$Qd = 60 - 4p$$
$$Qs = -10 + 6p$$

அரசாங்கம் இப் பண்டத்தின் மீது குறித்த 50% வரியை விதித்தது.வரியின் பின்னரான நுகர்வோர் விலை, உற்பத்தியாளர் விலை யாது?

| நுகர்வோர் விலை | உற்பத்தியாளர் விலை |
|---|---|
| 1. ரூபா 8 | ரூபா 5 |
| 2. ரூபா 8 .50 | ரூபா 5.38 |
| 3. ரூபா 8.75 | ரூபா 5 .83 |
| 4. ரூபா 5 | ரூபா 8 |
| 5. ரூபா 5.50 | ரூபா 6 |

# கொழும்பு றோயல் கல்லூரி

## கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை-2010

## வழிகாட்டல் பரீட்சை

## பௌதிகவியல்-II-B Physics-II-B


*2 மணித்தியாலங்கள்* *2 Hours*

(பகுதி B கட்டுரை)

நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.


$g=10Nkg^{-1}$

01. i. உடற்பயிற்சியாளர் சில பயிற்சிகளை செய்கின்றனர். முதலில் $M=6.0kg$ திணிவுடைய பந்தை கையில் பிடித்துக்கொண்டு முன்கையைக் கிடையாக நீட்டிப் பிடிக்கின்றார். முன்னங்கையானது முழங்கை மூட்டு $J_1$ பற்றி சுழலக்கூடியது. முன்கையின் திணிவு $m=1.5.kg$ ஆகவும் முழங்கை மூட்டில் இருந்து அது 0.18 $m$ தூரத்தில் தாக்குகின்றது. முன்கையும் பந்தும் காரணமாக இரு தலை தசையில் $T_1$ என்னும் மேல் நோக்கியவிசை தாக்குகின்றது. இது மூட்டிலிருந்து 60 mm தூரத்தில் தாக்குகின்றது. எனின் பின்வருவனவற்றை கணிக்குக.




a. $T_1$ யின் பருமன்

b. முழங்கை மூட்டில் தாக்கும் விசையின் பருமைனயும் திசையையும் காண்க.





ii. இரண்டாவது பயிற்சியாக கையை கிடையாக நீட்டிப் பிடித்துக்கொண்டு முன்னர் பயன்படுத்திய பந்தை கையில் பிடித்திருக்கின்றார். முழங்கை மூட்டு $J_2$ இருந்து இதற்கான தூரம் 0.8 m ஆகும். இரு தலைத் தசை நாரில் கிடையுடன் $30^\circ$ கோணத்தில் படத்தில் காட்டியவாறு ஓர் விசை $T_2$ ஆனது தாக்குகின்றது. தோள் மூட்டு $J_2$ இல் இருந்து 0.15 m தூரத்தில் தாக்குகின்றது. கையின் திணிவு $m_1=4.0.kg$ ஆனது தோள் மூட்டு $J_2$, இல் இருந்து 0.35 m தூரத்தில் தாக்குகின்றது எனின் பின்வருவனவற்றைக் காண்க.

a. இணையத் தசையில் கொடுக்கப்படும் விசை $T_2$ இன் பருமன்

b. தோள் மூட்டில் தாக்கும்

1. கிடை விசையின் பருமன்
2. நிலைக்குத்து விசையின் பருமன்

iii. மூன்றாவதாக கிடையாக கோல் ஒன்றில் சுழலும் உடற்பயிற்சியாளர் கோலைப் பற்றிய சுழற்சி அச்சுப் பற்றி நிலைக்குத்து வட்ட இயக்கத்தை நிகழ்த்துகின்றார். உடற்பயிற்சியாளரும் கோலும் சுழற்சியின் போது விறைப்பாக உள்ளதாகவும் அத்துடன் சுழற்சியின் போது வளித்தடையையும் உராய்வு விசையையும் புறக்கணிக்க. உரு 1 இல் உள்ள நிலையில் உடற்பயிற்சியாளர் தனது ஓய்வு நிலையில் இருந்து ஆரம்பித்து ஒரு முழு அரைச் சுழற்சியின் பின் உரு 2 இல் உள்ள நிலையை அடைகின்றார். உடற்பயிற்சியாளரின் திணிவு 60 kg ஆகவும் சுழற்சி அச்சில் இருந்து உடற்பயிற்சியாளரின் திணிவு மையம் (G) ஆனது 1.20 m ஆகவும் உள்ளது. (உதவி : இத்தொகுதி அச்சில் இருந்து 1.20 m நீளமான லேசான இழையின் 60 kg திணிவை இணைப்பதற்கு ஒத்ததாகும்)




உரு 2

a. உரு 2 இல் உள்ள நிலைக்கு வரும் போது திணிவு மையத்தின் கதி என்ன?

b. உடற்பயிற்சியாளரின் கைகளில் தாக்கும் உயர் இழுவிசை என்ன?

02. i. இயல்பான செப்பம் செய்கையில் கூட்டுநுணுக்குக்காட்டிப் பொருளின் தலையில் ஆரம்பித்து இரு கதிர்களின் பாதையை இறுதிவிம்பத்தின் வரைக்கும் வரைந்து காட்டுக.

ii. மேலுள்ள செப்பம் செய்கையில் உருபெருக்கவலுவுக்கான கோவையை எளியவடிவில் தருக.

iii. 3cm, 9cm குவியத்தூரங்களை உடைய கூட்டுநுணுக்குக் காட்டி 24 cm இடைத் தூரத்தில் வைக்கப்பட்டுள்ளது.

a. இறுதி விம்பம் முடிவிலியில் உருவாகத்தக்கதாக பொருள் எங்கே வைக்கப்படல் வேண்டும்.

b. இச் செப்பம் செய்கையை இறுதி விம்பம் தெளிவுப் பார்வையின் இழிவுத்தூரம் 25 cm இல் உருவாக்கப்படும் போது கோண உருப்பெருக்கம் வலு யாது?

03. i. இருமுனைகளும் திறந்த குழாய் ஒன்றில் அடிப்படையில் பரிவுறும் போது அலை வடிவத்தை வரைந்து காட்டுக. அடிப்படையில் பரிவுறும் நிலையில் அதிர்வெண் $(f_0)$ இற்கான கோவையை வளியில் ஒலியின் கதி $V$ குழாயின் நீளம் $l$ சார்பாக எழுதுக.

ii. ஈர்க்கப்பட்ட இழையின் 1ஆம் மேற்றோனிக்குரிய அலைவடிவத்தை வரைந்து காட்டுக. அவ் அதிர்வெண்ணுக்கான கோவையை இழையின் நீளம் $l$, அலகு நீளத் திணிவு $m$, இழுவை $T$ என்பன சார்பாக எழுதுக.

iii. ஒரு முனை மூடிய குழாயில் அடிப்படையிலும் இழையில் 1ஆம் மேற்றொனியிலும் x என்னும் அதிரி பரிவுறுகின்றது. இரு முனைகளும் திறந்த குழாயில் அடிப்படையிலும் முன்னர் பயன்படுத்திய இழையில் வேறொரு இழுவையின் கீழ் முதலாம் மேற்றொனியில் y என்னும் அதிரியுடன் பரிவுறுகின்றது. இரு முனைகளும் திறந்த குழாயானது ஒரு முனை மூடிய குழாயின் நான்கு மடங்கு ஆகும். $x$ உம் y யும் அதிரும் போது அடிப்பதிர் வெண் 400 Hz ஆகும். வளியில் ஒலியின் கதி 320 $ms^{-1}$ ஆகும் பின்வருவனவற்றை கணிக்குக.

a. x இனதும் y யினதும் அதிர்வெண்கள்

b. இரு குழாய்களினதும் நீளங்கள்

c. இரு நிலமைகளின் கீழும் இழைவழியேயான அலைக்கதிகள்

b. இரு நிலமைகளில் இழையின் இழுவையின் சதவீதமாற்றம்

e. இழையினாலும் குழாயினாலும் ஓரே அதிர்வெண்களை பிறப்பித்தாலும் அவற்றின் ஒலியை வேறுபடுத்தி அறியக்கூடியதாக இருக்கும். இதனை விளக்குக.

04. i. மேற்பரப்பு ஒன்றுக்கு செங்குத்தாக வெப்பப் பாய்ச்சல் வீதம் $\frac{\Delta Q}{\Delta t} = KA\frac{(\theta_1-\theta_2)}{\ell}$ ஆல் தரப்படுகின்றது.

a. ஒவ்வொரு உறுப்பையும் வரையறுக்குக.

b. மேற்கூறிய சமன்பாடு வலிதாவதற்கான இரு நிபந்தனைகளைக் கூறுக.

ii. விளையாட்டு வீரன் ஒருவன் ஓடிக்கொண்டிருக்கும் போது அவனது உடலில் இருந்து 1000 $kjmin^{-1}$ என்னும் வீதத்தில் வெப்பம் பிறப்பிக்கப்படுகின்றது. அத்துடன் உடலின் அகவெப்பநிலை $44^0C$ யிற்கு உயருகின்றது.

ஒரு பகுதி வெப்பமானது தசையினூடாக உடல் மேற்பரப்பிற்கு வருவதன் மூலம் சூழலுக்கு இழுக்கின்றது. இழுக்கும் வெப்பத்தின் ஐந்தின் ஒரு பகுதி வேறுவிதமாக இழுக்கின்றது. உடல் சதை நார்களின் தடிப்பு 1cm ஆகவும் உடல் மேற்பரப்பின் பரப்பளவு $1.8m^2$ உடன் மேற்பரப்பு வெப்ப நிலை $34^0C$ ஆகும்.

a. உடலின் வெப்பக் கடத்தாறை கணிக்க.

b. உடலில் இருந்து வேறு வழிகளில் சூழலுக்கு வெப்ப இழுக்கும் முறைகள் யாவை?

c. அறை வெப்ப நிலை $30^0C$ ஆயின் குளிரல் மாறிலி k ஐக் கணிக்குக.

iii. அவன் உடல் மேற்பரப்பு முழுவதையும் ஒரு மில்லி மீற்றர் தடிப்புடைய மெல்லிய பெனியன் (Skinny) ஒன்றை அணிந்துள்ளான். அதன் வெப்பக்கடத்தாறு ஆனது உடல் தசையின் வெப்பக்கடத்தாறின் 1/4 மடங்காகும். அத்துடன் உடலின் மேற்பரப்புக்கு சமனான பரப்பளவைக்கொண்டது. உடலின் அக வெப்பநிலை தொடர்ந்து $44^0C$ இல் இருக்க அறை வெப்பநிலை $31^0C$ ஆக இருக்கிறது. வேறு வழிகளில் இலக்கும் வெப்பத்தின் அளவு மாறாதிருக்கின்றது. உடலின் மேற்பரப்பு வெப்பநிலையை கணிக்குக.

iv. உடலிற்கும் பெனியனுக்கும் (Skinny) இடையே ஓர் இடைவெளி உள்ளது. பகுதி (iii) இல் பெறப்பட்ட அதே பெறுமானம் இப்போது உடலின் மேற்பரப்பு வெப்ப நிலையாக கிடைக்குமா? உமது விடையை விளக்குக.


v. அவன் ஓடும் போது உடலின் கூடிய பகுதியை உடுப்பினால் மூடாமலும் உடலினை ஈரலிப்பாக வைத்திருத்தால் சிறந்த இச்செயற்பாட்டினை நீர் எதிர்பார்ப்பது என்ன? விளக்குக.

05. ஓர் ஏற்றப்பட்ட துணிக்கையானது மின்புலத்தில் ஆர்முடுகும் ஆனால் காந்தப்புலத்தில் ஏற்றப்பட்ட துணிக்கை அவ்வாறு நடக்க முடியாது இதற்கான காரணத்தை தருக. மின்னோடும் கடத்தியைச் சூழ காந்தப்புலம் இருக்கும் ஆனால் அதைச் சூழ மின்புலம் இழக்கமுடியாது இதற்கான காரணத்தை விளக்குக.

i. சீரான காந்தப்புலம் B யிற்கு செங்குத்தாக ற்வேகத்டதுடன் செங்குத்தாக புகும் Q ஏற்றமுடைய துணிக்கை மீது தாக் கும் காந்த விசை F இதற்கான கோலையை எழுதுக. ஏன் அத்துணிக்கை ஓர் வட்டப்பாதையில் இயங்குகின் றது. என விளக்குக.

ii. துணிக்கையின் திணிவு $m$ ஆயின் காந்தப்புலத்தில் துணிக்கையின் வட்டப் பாதையின் ஆரை $r$ இற்கான ஓர் கோவையை பெறுக. இங்கு ஈர்ப்பு விளைவுகளை புறக்க ணிக்குக. அத்துணிக்கை ஓர் முழுவட்டத்தை ஆற்றுமா காரணம் தருக.


iii. மிகப் பரந்த அளவில் பரந்திருக்கும் புலத்தி னுள் துணிக்கை ஒன்று புலத்துடன் கோணத்தில் புகுகின்றது. துணிக்கையின் பாதையை வடி வத்தை கூறுக. துணிக்கை ஓர் முழு வட்டப் பாதையை பூர்த்தி செய்யும் போது துணிக்கை பயணித்த தூரம் S இற்கான ஓர் கோவையை பெறுக.





B=2 T, θ= 1μ C, $m=7x10^{-6}$ kg, $u=10^6ms^{-1}$ ஆயின் S கணிக்க. துணிக்கையின் மேற்கூறிய கதி $u=10^6 ms^{-1}$ இற்கு ஆர்முடுக்குவதற்கு தேவையான மின்புலச் செறிவின் அளவு யாது?

06. i. சீர்கோப்பின் விதிகளைக் கூறுக.

ii. கல்வேனாமானியின் முழுத்திரும்பல் அளவிடை 400mA இற்குரிய அதன் அகத் தடை 50 Ω ஆகும் அதன் mA அளவிடையும் அழுத்த அளவிடையும் காட்டப்பட்டுள்ளன. இதனை உமது தாளில் பிரதி செய்து சதுரங் களை பூர்த்தி செய்க.




iii. மேலே காட்டப்பட்ட உரு ஆனது மேல் கூறப் பட்ட கல்வனோமானியை பன்மானியாக மாற்று வதற்கான ஏற்ற மின் சுற்று ஆகும். இதனைக் கொண்டு மின்னோட்டத்தினையும் வோல்ற்றளவுகளையும் வித்தியாசமான வீச்சுக்களில் பெறலாம்.




a. இதனை அம்பியர்மானியாக 0-10A வீச்சில் அளவிடபயன்படுத்தும் போது ஆளிகள் $S_1$, உம் $S_2$ வும் எம்முடிவிடங்களுக்கு இணைக்கப்படல் வேண்டும்.

b. 0-40 V வீச்சுள்ள வோல்ற்றுமானியாக இதனைப் பயன்படுத்துவதற்கு ஆளிகள் $S_1$, $S_2$ ஆகியன எவற்றுக்கு இணைக்கப்படல் வேண்டும்.

c. சுற்றின் முனைகள் x,y என்பன மின்கலம் ஒன்று, 19Ω தடை என்பவற்றுடன் தொடரில் இணைக்கப்பட்டுள்ள $S_1$ ணையும் $S_2$ வையும் முனைகள் A யிற்கும் P யிற்கும் இணைக்கும் போது கல்வனோமானியினூடு மின்னோட்டம் செல்லும். மின்னோட்டம் 50mA ஆகும். $S_1$ யும் $S_2$ யும் முனைகள் B யிற்கும் Q விற்கும் இணைக்கும் போது கல்வனோ மானியினூடு 6 mA மின்னோட்டம் செல்கின்றது. கலத்தின் மின்னியக்க விசையையும் அகத்தடையையும் காண்க.

**நீங்களே உங்கள் வாயைப் பரிசோதிக்கலாம்!**

✹ உங்கள் கைகளை சுத்தமாகக் கழுவுங்கள்.

✹ முகம்பார்க்கும் கண்ணாடி முன்பாக நில்லுங்கள்

✹ உங்கள் முகத்தில் ஏதேனும் வீக்கங்கள், கட்டிகள்,

குழியை சுயமாக பரிசோதித்து புற்றுநோய் முன்நிலைகளை முன்கூட்டியே அறிந்து கொள்வதன் மூலமும், சரியான பற்சிகிச்சை பெறுவதன் மூலமும் வாய்ப்புற்று நோய்க்கு ஆளாவ்திலிருந்து எம்மை பாதுகாப்போம்.

வர்கள் – 30 வயதிற்குப் பின்

– குழந்தை இல்லாதவர்கள்

– தாய்ப் பாலூட்டாதவர்கள்

✹ அதிக உடற்பருமன் உடையவர்கள்.

✹ புகைப்பிடித்தல், மதுபானம் அருந்தும்

டாம். அப்போது சாதாரண மார்பகங்களில் கூட கட்டி உள்ளது போல் சந்தேகம் தரலாம்.

2

✹ வெளிப்பகுதியில் இருந்து முலைக் காம்பை நோக்கி வட்ட வடி வில் சோதித்தல்.


✹ கமக்கட்டுப் பகுதியையும் சோதிக்க வும்

✹ இறுதியில் முலைக்காம்பை அழுத்தி ஏதாவது திரவக்கசிவு உள்ளதா என அவ

# புற்றுநோய் ஓர் அறிமுகம்

புண்கள் உள்ளனவா என விரல்களின் நுனியினால் சோதித்துப் பாருங்கள். முகம் சமச்சீராக உள்ளதா என கவனியுங்கள்.

✹ உங்கள் மேல், கீழ் உதடுகளை நன்கு இழுத்து அவற்றில் சிவப்பு, வெள்ளை புள்ளிகள், வீக்கங்கள் அல்லது கட்டிகள், நோவுள்ள பகுதிகள் உள்ளனவா என்பதை




பார்த்தும், கைவிரல்களின் உதவியுடனும் பரிசோதியுங்கள்.

✹ உங்கள் முரசுகளில் ஏதேனும் நிற மாற்றங்கள், வீக்கங்கள், கட்டிகள், புண்கள், இரத்தக்கசிவு என்பன உள்ளனவா என பார்த்தும் தொட்டும் உணருங்கள்.

✹ உங்கள் கடைவாயை வெளிப்பக் கத்துக்கு கையினால் நன்கு இழுத்து வாய்க் குழியின் உட்பக்கச்சுவரில் ஏதேனும் வீக்கங்கள், புண்கள் / நிறமாற்றங்கள் உள்ளனவா என பரிசோதியுங்கள்.

✹ நாக்கை நன்கு வெளியே நீட்டியும் பக்கப் புறங்களுக்கு இழுத்தும் அதில் மேற் கூறப்பட்ட மாற்றங்கள் ஏதாவது உண்டா என நன்கு பரிசோதியுங்கள்.

✹ வாயை நன்றாக – திறந்து அண்ணத்தை, தொண்டை முளையை (Tonsil), உண்ணாக்கு ஆகியவற்றை பார்த்து மேற்கூறப் பட்ட மாற்றங்கள் ஏதாவது உண்டா என பார்த்தும் தொட்டும் உணருங்கள்.

✹ நாக்கை உயர்த்தி வாய்க்குழியின் அடிப்பகுதியில் மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என பரிசோதிக்கவும்.

மேற்படி பரிசோதனையை மாதத்திற்கு ஒரு தடவையேனும் செய்து ஏதேனும் சந்தேகத்துக்கிடமான மாற்றங்கள் காணப்பட்டால் வைத்தியரை நாடி ஆலோசனை பெறவும்.

தகுந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களை கைக் கொள்ளுவதன் மூலமும், வாய்க்

**மார்பகப் புற்று நோய்**

*அறிமுகம்*

இலங்கையில் பெண்களில் ஏற்படும் புற்று நோய்களில் மார்பகப் புற்று நோயே முதலிடம் வகிக்கின்றது.

**எச்சரிக்கை அறிகுறிகள் (Warning Symptoms)**

✹ மார்பகத்தில் நோ அற்ற கட்டிகள் தோன்றுதல்

✹ மார்பகத்தில் பருமன் அசாதாரணமாக அதிகரித்தல்

✹ ஒரு மார்பகம் அசாதார்ணமாக மறு மார்பகத்திலும் பதிவாக இருத்தல்

✹ முலைக்காம்பிலிருந்து ஏதாவது திரவம் அல்லது குருதிக்கசிவு ஏற்படல்.

✹ முலைக்காம்பு உருமாறியிருத்தல் அல்லது உள்வாங்கப்பட்டிருத்தல்

✹ மார்பகத்தின் தோலில் சுருக்கங்கள் ஏற்படுதல் (Puckering)

✹ மார்பகத்தின் தோலில் குழிகள் காணப்படுதல் (Dimpling)

✹ மார்பகத்தின் தோல் தோடம் பழத் தோல் அமைப்பாக மாறுதல் (Peau-de-Orange)

✹ கமக்கட்டுப் பகுதியில் நெறிகள் போடப்பட்டிருத்தல்.

✹ கையில் அசாதாரணமான வீக்கம் ஏற்படுதல்(Oedema Of The Upper Limb)

**மார்பகப் புற்றுநோயின் பிந்திய நிலையில்...**


பொதுவாக உடலில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள்.

✹ உடல் மெலிதல்

✹ சோர்வு

✹ இலகுவில் களைப்படைதல்

✹ பசியின்மை



**ஆபத்திற்குரியவர்கள் யார்?**

✹ பெண்கள் ஆண்களைவிட அதிகளவில் (99% பெண்கள், 1% ஆண்கள்)

✹ நெருங்கிய உறவினரிடையே மார்பகப் புற்று நோய் உடையவர்கள்.

✹ அதிகளவில் ஈஸ்ரோஜன்(Oestrogen) ஓமோன் சுரப்பு வரக் கூடியவர்கள்.

– மிகக் குறைந்த வயதில் பூப்படைதல் – 12 வயதிற்குள்.


– கூடிய வயதில் மாதவிடாய் நிறுத்தல் – 55 வயதிற்குப் பின்

– பிந்திய வயதில் முதல் கர்ப்பம் தரிப்ப

பழக்கம் உடையவர்கள்.

✹ அதிக கொழுப்பு உணவை உட்கொள் பவர்கள்.

**சுயமார்புப் பரிசோதனை**



ஒவ்வொரு மாதமும் மாதப்போக்கின் பின் ஒரு வாரத்தினுள் அல்லது மாதப் போக்கு நின்றவர்கள் மாதத்தின் குறித்த ஒரு நாளில் குளிக்கும் போதோ/ கண்ணாடியின் முன் நின்றோ / படுத்திருந்தவாறோ சுய மார்புப் பரிசோதனை செய்யலாம்.

**1) பார்வை மூலம் பரிசோதித்தல் (Inspection)**

கண்ணாடியின் முன் நின்று கை களைத் தொங்க விட்டபடியும், மேலே உயர்த்தியவாறும், இடுப்பில் வைத்தும் மார்பகங்களில் மேலே கூறிய எச்சரிக்கை அறிகுறிகள் உள்ளனவா என அவதானித்தல்

**2) தொடுகை மூலம் பரிசோதித்தல் (Palpation)**

✹ வலது மார்பை இடது கையாலும், இடது மார்பை வலது கையாலும்.

✹ 2ஆம், 3ஆம், 4ஆம் விரல் தட்டைப் பகுதியில் சோதித்தல்

✹ விரல்களால் கிள்ளிச் சோதிக்க வேண்

தானிக்கவும்.

✹ ஏதாவது அறிகுறிகள் காணப்பட் டால் உடனடியாக வைத்தி யரை நாடுங்கள்.

**கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்**

கருப்பையின் கீழ்ப்பகுதியையும் பிறப்பு கால்வாயையும் (யோனிமடல்) இணைக்கும் பகுதியான கருப்பைக் கழுத்துப் பகுதியின் சுவர்களில் ஏற்படும் மாற்றம் கருப்பைக் கழுத்துப் புற்று நோயாகும். பெண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் 15 வீதமானவை கருப் பைக் கழுத்துப் புற்று நோயாகும். ஆரம்ப நிலையிலேயே அடை யாளம் காணப்பட்டால் சிகிச்சை மூலம் 100 வீதம் குணமாக்கப்படக் கூடியது.

**கருப்பைக் கழுத்து புற்றுநோயை ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகள்**

**பாலியல் நடத்தைகள்**

1.பாலியல் உடலுறுவைக் குறைந்த வயதிலேயே ஆரம்பித்தல்.

2. ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் உடலுறவு கொள்ளல்.

3. ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் தொடர்படைய ஆணுடன் உடலுறவு கொள்ளல்.

4. இளவயதிலேயே உடலுறவை ஆரம்பித்த ஆண்/ கருப்பைக் கழுத்து புற்று நோயுள்ளவருடன் தொடர்புடைய ஆணுடன் உடலுறவு கொள்ளுதல்

புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு,
யாழ். போதனா வைத்தியசாலை.

5. நீண்ட காலம் வாய்மூலமான கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளுதல்.

6.முன்தோலினை நீக்கம் செய்யாத ஆணுடன் உடலுறவு கொள்ளுதல்

7. சில வைரஸ் தொற்றுக்கள்

–பாலுண்ணியைஏற்படுத்தும்வைரஸ்(HPV)

–ஹேப்பிஸ் வைரஸ்.

(தொடரும்)

## அரசியல் பேதங்களை களைந்து அனைவருக்கும் சமமாக சேவையாற்றுவேன் –விமல் வீரவன்ச

(கொழும்பு)

அரசியல் பேதங்களை களைந்து அனைவருக்கும் சமமான முறையில் சேவையாற்றுவேன் என வீடமைப்பு பொறியில் சேவை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் பாதுகாப்பினையும் அபிவிருத்தியினையும் இலக்காகக்கொண்டு சேவையாற்றவுள்ளதாகவும் படை வீரர்களின் பாரிய அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் மீட்டெடுக்கப்பட்ட நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என்றும் தெரிவித்தார்.

செத்சிறிபாயவில் தமது அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் கலந்துகொண்டார். (2-4)

## இலங்கையில் செனட் சபை ஒன்றை அமைப்பதற்கான முனைப்புகள் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் செனட் சபை ஒன்றை அமைப்பதற்கான முனைப்புக்களை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இதற்கமைய எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் செனட் சபை ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் செனட் சபையை அமைப்பது குறித்து ஏற்கனவே சட்டத்துறையினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செனட் சபைக்கு எத்தனை பேரை தெரிவு செய்ய வேண்டும், எவ்வாறு தெரிவது போன்ற விடயங்கள் குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

மாகாண ரீதியிலும் இதற்கான உறுப்பினர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் நியமன முறைமைகள் மற்றும் அங்கத்துவர்களின் எண்ணிக்கை என்பன தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாம் தவணைக்காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் செனட் சபை அமைப்பது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-4)




வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான சைக்கிள் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மாணவிகளுக்கு சைக்கிள் வழங்குவதையும் அருகில் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்வதில் பொலிஸார் அதிக கரிசனை காட்டவேண்டும்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸார் மீது மக்கள் நம்பிக்கை கொள்ளும் வகையில் உடனடியாக அடிப்படை



மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்டான பொலிஸ் அக்டமியில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலையில் மக்களின் நன் மதிப்பை பெற்றுக் கொள்வதற்கான முனைப்புக்களில் பொலிஸார் அதிக கரிசனை காட்ட வேண்டும்.

பொலிஸ்மா அதிபர் மற்றும் உயர் அதிகாரிகள் இந்த மாற்றங்களுக்கு கூடுதல் அக்கறை காட்ட வேண்டும் .முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுதல் மற்றும் விசாரணைகளை காலம் தாழ்த்துதல் போன்ற நடவடிக்கைகளினால் மக்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர். இந்த விடயங்கள் தொடர்பில் உரிய நட வடிக்கை எடுக்கப்படவேண்டும். கடந்த 3 தசாப்த காலமாக பொலிஸார் தீவிரவா தத்தை இல்லாதொழிப்பதில் கூடுதல் கவ னம் செலுத்தினர்.

தற்போது அந்த நிலைமை மாறியுள்ளது. சட்டவிரோத ஆயுத கொடுக்கல் வாங்கல்கள் , போதைப்பொருள் கடத்தல் போன்ற நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்கு பொலிஸார் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும் என்றார்.

இதேவேளைவிசாரணைகள் மற்றும் குற்றச்செயல்களுக்கு தண்டனை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் சிக்கல் நிலைமை காணப்படுவதாக பொலிஸ்மா அதிபர் மஹிந்த பால சூரிய ஒப்புக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-4)

# பொது வைத்தியசாலைகளின் குறைகளை நிவர்த்தி செய்ய விசேட பிரிவு

## சுகாதார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

அரச வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற மருந்து தட்டுப்பாடுகள் மற்றும் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் போன்றவை தொடர்பிலான முறைப்பாடுகளை பதிவு செய்து கொள்வதற்காக சுகாதார அமைச்சில் விசேட பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பிரதான ஔடத நிபுணர் ரஞ்சித் பெரேராவின் தலைமையில் இயங்கும் இவ்விசேட முறைப்பாட்டுப்பிரிவிற்கு 0112686393 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொலை நகல் மூலமாகவும் பொது மக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விசேட முறைப்பாட்டுப் பிரிவு தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், அரச வைத்தியசாலைகளில் நிலவுகின்ற மருந்துத் தட்டுப்பாடு மற்றும் இன்னும் பல பிரச்சினைகள் தொடர்பில் பொது மக்கள் இம் முறைப்பாட்டுப் பிரிவிற்கு செய்யும் முறைப்பாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொள்வதுடன் அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் எடுப்பார்கள்.

கடந்த காலங்களில் அரச வைத்தியசாலைகளில் பாரிய அளவு மருந்துத் தட்டுப்பாடுகள் நிலவியதுடன் அங்கு பல அசாதாரண செயற்பாடுகளும் இடம்பெறுவதாகவும் செய்திகள் பரவலாக வெளியாகின. அச்செய்திகளில் ஓரளவு உண்மைத் தன்மை இருந்தபோதும் பாரிய மருந்துத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டிருக்க வில்லையென்பது பின்னர் கண்டறியப்பட்டது.

இவ்வாறான பிரச்சினைகளை உரிய அதிகாரிகளுக்கு உடனுக்குடன் அறிவிக்காமையினாலேயே இவ்வாறான செய்திகள் வெளியாகின்றன. எனவே இவ்வாறான அசௌகரியங்களை தவிர்த்து வைத்தியசாலைகளில் நிலவுகின்ற பிரச்சினைகளை உடனுக்குடன் கண்டறிந்து நிவர்த்தி செய்வதற்காகவே இவ் விசேட முறைப்பாட்டுப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட பிரிவினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. அதாவது இவ்வாறான முறைப் பாடுகளை செய்வதற்கான மூன்று இலக்கங்களை கொண்ட அவசர தொலை பேசி இலக்கத்தினை பெற்றுக்கொடுப்பதே அந்த நட வடிக்கையாகும் எனவும் அவர் கூறினார்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### பிரமதண்டு

Botanical Name- Argemone mexicana
Family - papaveraceae
Engl-Mexican poppy
Sinh-Rankirigo katu

அமெரிக்காவில் மெக்சிகோவினைச் சார்ந்த இத் தாவ்ரம் இலங்கையில் தரிசு நிலங்களிலும் தோட்ட வெளிகளிலும் களைச் செடியாக வளர்கின்றது.செங்குத்தாக வளரும் ஒரு பருவ குறுஞ்செடி; 1 மீற்றர் உயரம் வளரக் கூடியது, மஞ்சள் நிறத்தில் பால் போன்ற (Latex) சுரப்பி கொண்டது; இலைகள் வெண்மையான நரம்புகளுடன் உள்ளன; மடலின் ஓரம் வெட்டப்பட்டது. முட்கள் கொண்டவை.மலர்கள் ஒளிரும், மஞ்சள் நிறமுடையது. கனிகள் வெடிகனி வகையினது; நுனி துளை மூலம் திறக்கின்றன. விதைகள் கறுப்பு நிறம் கொண்டவை.

**பரம்பலும் இனவிருத்தியும்**

தோட்டங்களிலும், மண்பாங்கான இடத்திலும் தனிப்பட்டும், கூட்டம் கூட்டமாகவும் வளரும். இதற்கு குடியோட்டிப் பூண்டு என்ற பெயருண்டு.விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**மருத்துவப் பயன்கள்**

- பிரமதண்டுஇலையை எடுத்து அதன் மேல் உள்ள முட்களை வெட்டி விட்டு கையில் வைத்து கசக்கி தேள் கொட்டிய இடத்தில் தேய்க்க விஷம் முறியும்.
- பிரமதண்டு இலையை அம்மியில் வைத்து நன்கு அரைத்து அதை சிரங்கின் மீது மேல் பூசி சீயாக்காயை சுட்டு அம்மியில் வைத்து மஞ்சளும் சேர்த்து அரைத்துப் பூச சிரங்கு மறையும்.
- பிரமதண்டு இலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி அதை உரலில் இட்டு நன்கு பொடித்து , அரித்து 130 மில்லிகிராம் அளவு தேனில் 40 நாட்கள் கொடுக்க கசரோகம் நன்கு குறையும்.
- பிரமதண்டு செடியை வேருடன் எடுத்து அதை துண்டுகளாக வெட்டி நிழலில் உலர்த்தி உரலில் இட்டு இடித்து அரித்து, தேவையான அளவு உப்பு சேர்த்து வைத்தல்.பின்பு



இதனால் பல் துலக்க பல் சம்பந்தமான கோளாறு தீரும்.

- நன்றாக செழித்து பூ, காய்களுடன் வளர்ந்திருக்கும் ஒரு பிரமதண்டு செடியை வேருடன் பிடுங்கி வந்து சுத்தம் பார்த்து கழுவி, நுனி முதல் அடிவேர் வரை நன்றாகக் காயும் படி நிழலில் உலர்த்தி எல்லாம் சருகாகக் காய்ந்தவுடன் , அதைச் சுத்தமான ஒரு இடத்தில் வைத்து தீமூட்டி எரியும் படிச் செய்ய வேண்டும். கரியான பின் அதை ஒரு சட்டியில் போட்டு வைத்து மேலும் தீ எரித்து, அந்தக் கரியில் தீப்பிடித்து நெருப்பாகி , அது தானே சாம்பலாகும் வரை வைத்திருந்து இறக்கி அதை அரித்து ஒரு சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு, ஒரு தேக்கரண்டியளவு பசுவின் வெண்ணெயில் 130 மி.கி அளவு இந் தச் சாம்பலைப் போட்டு குழப்பி காலை வேளையில் மட்டும் தொடர்ந்து 40 நாட்கள் கொடுக்க ஆரம்பக் கட்ட குஷ்டரோகம் தணியும்.
- ஆஸ்மாநோயின் போது வெளி மூச்சுக் கஷ்டம் ஏற்படும் போது மேற்கூறிய பிரமதண்டு சாம்பலில் 60- 130 மி.கி அளவு தேனில் பயன்படுத்தலாம்.
- கண் சம்பந்தமான எரிச்சல், தாபிதம் போன்ற நிலைமைகளில் பிரமதண்டு பூக்களில் 20 இனைச் சேகரித்து ஒரு பானையில் போட்டு அதில் தண்ணீர் விட்டு நன்றாகக் கொதிக்க வைத்து, இறக்கி மேலும் தேவையான அளவிற்கு விளாவி காலையில் தலை முழுக வேண்டும்.இந்த விதமாக வாரத்தில் இருமுறை கண் எரிச்சல் குறையும் வரை முழுகி வரலாம்.
- வீக்கத்திற்கு பிரமதண்டு இலைகளைத் தேவையான அளவு கொண்டு வந்து உரலில் போட்டு இடித்து சாறு எடுத்து அந்தச் சாற்றை கொதிக்க வைத்துக் கடைசியாக சிறிதளவு கட்டிக் கற்பூரம் சேர்த்து கலக்கி வீக்கத்தின் மேல் பூசிவர வீக்கம் வாடும்.
- விதையைப் பொடித்து புகைத்துப் புகையை வாயிற் கொள்ள பல்வலி தீரும்.
- இதனுடைய பச்சை வேரை நன்றாக அரைத்து தேள்கொட்டிய இடத்தில் பூச விஷம் இறங்கும்.
- பிரமதண்டு பூவிலிருக்கும் மகரந்தப் பொடியை 5 கிராம் அளவு எடுத்து முருங்கைப் பிசின் 4 கிராம், நெய் 4 கிராம் அளவு சேர்த்து 3 பங்காக்கி காலை, மதியம், இரவு தேனில் உட்கொள்ள தோள்களிலும் , பக்கங்களிலும் உண்டாகின்ற வாதநோய்கள் நீங்கும்.
- பிரமதண்டு இலையின் சாறும் ஆடு தீண்டாப் பாளைச் சாறும், நெய்யும் கலந்து 1 தேக்கரண்டி வீதம் தினம் இருவேளை அருந்த வெள்ளை சாய்தல் நோய் தணியும்.

குறிப்பு:-பிரமதண்டு விதையானது குடலில் நமைச்சலை ஏற்படுத்தி வாந்தி பேதியை உண்டுபண்ணும் Organic Irritant Poison வகையைச் சார்ந்தது. எனவே விதைகளைப் பயன்படுத்தும் போது வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவும். இதனுடைய விதை எண்ணெய் 30துளி (Drops)கொடுக்க பேதியாகும்.

பிரமதண்டு விதைகளை கடுகு விதைகளுடன் கலப்படம் செய்வதால் சில சந்தர்ப்பங்களில் கடுகு எண்ணெய் பயன்படுத்தும் போது மேற்கூறிய குறி குணங்கள் ஏற்படலாம். எனவே மருத்துவத் தாவரங்களினதும் அவற்றின் பாகங்களினதும் மருத் துவச் செய்கைகள்,வேதியப்பொருட்களை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

## மாவீரன் காசு!



இவை ஹெலனிஸ்டிக் காசுகள். மாவீரன் அலெக்ஸ்சாண்டர் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்தப் பட்டவை. சுமார் 250க்கும் மேற்பட்ட காசுகளை சிரியா நாட்டு குடிமகன் ஒருவர் சமீபத்தில் கண்டெடுத்து அவற்றை தொல்லியல் துறையிடம் ஒப்படைத்துள்ளார்.

தன் நிலத்தில் வீடு கட்ட பள்ளம் தோண்டிய போது இக்காசுகள் கிடைத்தன. இப்போது இந்தக் காசுகள் அந்நாட்டு அலெபோ மாகாணத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## மாமோத் யானை!



ஆஜானுபாகு உடலமைப்பைக் கொண்ட யானைகளுக்கு 'மாமோத்' என்று பெயர். சுமார் 42 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சைபீரியாவில் வாழ்ந்த மாமோத் யானை ஒன்றின் படிமங்களை சமீபத்தில் கண்டெடுத்தனர். வளைந்த நீண்ட தந்தம், மெகாசைஸ் எலும்புகள் ஆகியவை இந்த யானைகளின் ஸ்பெஷாலிட்டி. இந்த யானையின் எலும்புகளைக் கொண்டு மாதிரி யானை ஒன்றை சிகாகோ அருங்காட்சியகத்தில் வடிவமைத்துள்ளனர். அதைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள்!

## மின் வாகனம்!



தென்கொரியாவில் முதல் முறையாக மின்சார வாகனம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். மூன்று பெட்டிகளுடன் இயங்கும் இந்த வாகனம் முற்றிலும் மின் சக்தியில் ஓடக்கூடியது.

இது இயங்க மின்சாரக் கம்பி தேவையில்லை. தார் ரோட்டில் புதைக்கப்படும் கேபிள் வயர்கள் மூலம் தானாகவே சார்ஜ் செய்து கொண்டு ஓடுகிறது.

இப்போது சியோல் நகரை வலம் வந்து கொண்டிருக்கிறது இந்த வாகனம்!

# உலகைச் சுற்றி

AROUND THE WORLD

ஆர்.யூ.பாலமுருகன்


## குண்டு...குண்டு...குண்டுப் பெண்ணே!



ஒவ்வொருத்தரும் உடலை வருத்தி ஏதேதோ சாதனை செய்யத் துடிக்கின்றனர். நியூயோர்க்கைச் சேர்ந்த டோனா சிம்சன் உட்கார்ந்த இடத்திலேயே சாதனை படைக்க கங்கணம் கட்டிக் கொண்டுள்ளார். ஆமாம் உலகிலேயே குண்டான பெண் என்ற பட்டத்தை தட்டிச் செல்ல இருக்கிறார் இவர். இப்போது 272 கிலோ எடை உள்ள இவர் மேலும் 181 கிலோ எடை அதிகரிக்கும் திட்டத்தில் உள்ளார். இதற்காகவே நொறுக்குத் தீனிகளையும் ஃபாஸ்ட் ஃபுட் வகைகளையும்வெளுத்து வாங்குகிறார்.

எடையைக் குறைக்க வேண்டும் என்ற பிரசாரம் இவரிடம் எடுபடவே இல்லையாம்!

## டாக்டர் ரோபோ!



அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் 'ரோஸ்வெல் கன்சர் சென்டர்' உள்ளது. இங்கு சமீபத்தில் ரோபோ ஒன்று நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்துள்ளது. இதை சாதித்துக் காட்டியவர் இந்திய டாக்டர் கோவிந்த் ஸ்ரீமத் வீரவள்ளி. சிறுநீர்ப்பையில் உள்ள கட்டியை ரோபோ அகற்றி மருத்துவத்துறையில்புதியஅத்தியாயத்தை தொடங்கியுள்ளது. இந்தச் சாதனையை அந்த மையமே தலையில் வைத்துக் கொண்டாடி வருகிறது!

## ஜாம்பாவான் நாய்!



சராசரியாக நாயின் உயரம் எவ்வளவு இருக்கும்? ஒன்று அல்லது இரண்டு அடி இருக்குமா? அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டேவிட் நாசர் 3 அடி 7 அங்குல உயரம் உள்ள நாயை வளர்த்து வருகிறார்.

அதன் பெயர் ஜோர்ஜ். ஆஜானுபாகு உயரத்துடன் உள்ள இது கிரேட்டேன் இனத்தைச் சேர்ந்தது. உலகிலேயே மிக உயரமான நாய் இது என விரைவிலேயே கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்கவுள்ளது.

## சாவி ஜாலம்!

பராகுவே நாட்டில் சாவிகளைக் கொண்டு சிலை ஒன்றை உருவாக்கி உள்ளனர்.1989 இல் அங்கு நடைபெற்ற 'வெல்வெட் புரட்சியின்' 20 ஆம் ஆண்டு நினைவையொட்டி இந்த ஏற்பாடு. செக் குடியரசைச் சுற்றியுள்ள பல நாடுகளிலிருந்து மக்கள் கொண்டு வந்த சாவிகள் தான் சிலையாக மாறியுள்ளன. 85 ஆயிரத்து 741சாவிகள் இதில் அடக்கம். புரட்சி என்ற வார்த்தையை சிலையாகவே வடிவமைத்துள்ளது இதன் ஹைலைட்!



## தோலை காக்கும் வியர்வை!

வியர்வை, சளி, உமிழ்நீர் என்று மனிதருக்கு உருவாவதெல்லாம் அருவருக்கத்தக்கவையல்ல, அவை கிருமி நாசினிகளாக உதவுகின்றன.

எப்படி? வாய், மூக்கு வழியாக கிருமிகள் உள்ளே நுழைந்தால், சளி மற்றும் உமிழ்நீரின் வழவழப்பில் ஒட்டிக்கொண்டு உடலின் எதிர்ப்புச் சக்தியால் வெளியே வந்துவிடும். அதுபோல வியர்வையும் தோலில் ஒட்டும் கிருமிகளை வெளியேற்றுகிறது.

## வந்தாச்சு 3டி கமரா!




3டி.டி.வியைத் தொடர்ந்து 3டி கமராவும் அறிமுகமாகியுள்ளது. அமெரிக்காவில் லாஸ் வேகாஸில் சமீபத்தில் நுகர்வோர் எலக்ட்ராணிக் கண்காட்சி நடைபெற்றது.

இதில் அனைவரையும் சொக்க வைத்தது இந்த 3டி கமரா. இந்த கேமராவைக் கொண்டு 3 டி படம் எடுக்க முடியும். அதுமட்டுமா? இதில் இரண்டு விதமான 3 டி லென்சுகள் இருப்பதால் விருப்பத்துக்கு ஏற்ப புகைப்படங்களையும் எடுத்துக் கொள்ளலாம். ஒரே கல்லில் டபுள் மாங்காய்!

## சுப்பர் சிக்ஸ்!

- பாலைப் போலவே தயிரிலும் கல்சியமும் புரோட்டீனும் உண்டு.
- உலகிலேயே மிகப் பெரிய விளையாட்டு மைதானம்-ஸ்நாஹாவ்.செக். குடியரசில் உள்ளது.
- பிறந்த குழந்தை 50 சென்ரி மீற்றர் நீளம் இருந்தால் அது ஆரோக்கியமாக இருக்கிறது என்று அர்த்தம்.
- பூனைக்கு இனிப்புச் சுவை தெரியாது.
- பிரான்ஸில் கொசுக்களே இல்லை.
- உலகப் பரப்பில் 36.13 கோடி சதுர கி.மீ பகுதி கடலுக்குரியது.

## கங்காரு இரகசியம்!




பிறக்கும் போது கங்காரு ஒரு அங்குல நீளம்தான் இருக்கும். தாயின் வயிற்றுப்பையில் நான்கு மாதங்கள் தங்கி வளரும்.

நாளாக ஆக அதன் உடல் வளர்ச்சி 182 செ.மீற்றர், வால் 122 செ.மீற்றர் இருக்கும். நிமிர்ந்து நிற்கும் சில கங்காருகள் 213 செ.மீற்றர் உயரம் வரை இருக்கும்!

## நீ...ண்ட தீவுப் பாலம்!

உலகில் ஒரு தீவுக்கும் இன்னொரு தீவுக்கும் இடையே நிளமாக அமைக்கப்பட்ட பாலம் ஜப்பானில் உள்ளது.

ஹோன்ஹூ-ஹிகோகு தீவுகளுக்கு இடையே 37 கி.மீற்றர் நீளத்திற்கு இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது.



யாழ்.மாவட்ட பிரதேச சபை நூலகங்களுக்கான புத்தகம்வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் ஆளுநர் நல்லூர் பிரதேச சபை செயலாளர் எஸ்.சாந்தசீலனுக்கு ஒரு தொகுதி புத்தகம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படத்தில் காணலாம்.

## உலக புவி தினத்தை முன்னிட்டு

## நல்லூர் பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில்

# நடத்தப்பட்ட விழிப்புணர்வு போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக காணிப் பயன் பாட்டுத்திட்டமிடல் பிரிவினால் உலக புவி தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு ஓவியப்போட்டி - கையெழுத்துச் சஞ்சிகை ஆக்கப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவ -மாணவிகளுக்கும் திறந்த பிரிவுப் போட்டியாளர்களுக்கும் புவி தின விழா அன்று சான்றிதழ்கள் மற்றும் பணப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளதோடு விழிப்புணர்வு ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**ஓவியப்போட்டி**

**கனிஸ்ட பிரிவு**

யோ.ஜானுசா,ல.லாவண்யா (இந்து மகளிர் கல்லூரி),கே.தானுஜன் (கொக்குவில் இந்துக்கல்லூரி).

**சிரேஸ்ட பிரிவு**

யா.தாரணி (இந்து மகளிர் கல்லூரி), செ.காயத்திரி(கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வித்தி, சா. அபிராமி (இந்து மகளிர் கல்லூரி).

**திறந்த பிரிவு**

கி.தாரணி (ஜே/105 கிராம அலுவலர் பிரிவு)

**கையெழுத்துச் சஞ்சிகை ஆக்கப்போட்டி- கனிஸ்ட பிரிவு**

உ.சாந்திகா,தி.பிரியந்தனா(யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி),சி.பிரியங்கா (இந்து மகளிர் கல்லூரி)

**சிரேஸ்ட பிரிவு**

பா.ரூபினி,க.யசிந்தா,ஆ.சிற்பவி(கொக்குவில் இந்துக்கல்லூரி). (4-30)

## சித்திராப்பூரணை விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வடகிழக்கு கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சித்திரா பூரணை விரதம் இன்று புதன்கிழமை பகல் 12 மணியளவில் விநாயகப் பெருமானிற்கு விசேட பூசை நிகழ்வை தொடர்ந்து அம்பாளிக்கும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளது.

இவ் ஆலயத்தின் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 1 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூசையை தொடர்ந்து விநாயகப் பெருமான் உள்வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (2-4)

## நாடாளுமன்றத் தேர்தலுக்கான செலவீனம் இருநூறு கோடி ரூபா

(கொழும்பு)

கடந்த 8ஆம் திகதி நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல்களுக்காக 200 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல் செலவுகள் தொடர்பில் தற்போது கணக்கீடு செய்யப்பட்டு வருவதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 160 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் அதனைவிடவும் மிகவும் சிக்கல் மிகுந்தது என்பதனால் செலவுகள் மேலும் அதிகம் எனவும், இன்னமும் இறுதி கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில வாக்குச் சாவடிகளில் வாக்கெடுப்பு இரத்து செய்யப்பட்ட காரணத்தினால் மேலதிக செலவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (2-5)

## மேதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புனித ஜனநாயகக்கட்சியின் மே தின நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ். மணிக்கூட்டுக்கோபுரத்திற்கு அருகாமையில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் புதிய ஜனநாயக் கட்சியின் வடபிரதேச செயலாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (2-4)

## இலங்கையின் சுகாதார சேவையை உலகத்தரத்திற்கு உயர்த்த முடியும்

### சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை

(கொழும்பு)

சுகாதார அமைச்சினை நான் மனப்பூர்வமாக விரும்பியே ஏற்றுக்கொண்டேன். ஆகையினால் இவ் அமைச்சினை சிறப்பாக முன்னெடுத்துச் சென்று அதனூடாக மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவேன் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



இதுவரை காலமும் நான் பல்வேறு பதவி களை வகித்ததோடு அமைச்சுப் பொறுப் புக்களையும் ஏற்றி ருந்தேன். அதனூடாக பெற்றுக் கொண்ட அனுபவங்களையும் மற்றும் பல நவீன யுக்திகளையும் பயன் படுத்தி இலங்கையின் சுகாதார சேவையை உலகத் தரத்திற்கு உயர்த்த முடியும் எனவும் அதற்காக அனைவரும் ஒத்துழைத்து செயற்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத் தில் தனது பொறுப்புக்களை உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொண்டதன் பின்னர் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவை அந்தஸ்துள்ள இரண்டு அமைச்சுக்களை என் முன் பிரேரித்து இரண்டில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளுமாறு கூறினார். அதன் போது சுகாதார அமைச்சினை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டேன்.

இந்த அமைச்சுப் பொறுப்பினை சவாலாக ஏற்றுக் கொண்டு செயற்படுவதுடன் மக்களுக்கான சிறந்த சுகாதா்ர சேவையினைப் பெற்றுக்கொடுப்பேன். (2-4)

# அமைச்சுக்களின் பொறுப்புகள் தொடர்பில் செயலர்கள் அக்கறை கொள்ள வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து மக்களை ஒன்றிணைத்து அவர்களை முன்கொண்டு செல்வது எங்களுடைய பொறுப்பாகும். அதேபோல அமைச் சுக்களில் ஊழல் மோசடிகள் இடம்பெறுமாயின் அவற்றுக்கு அவ்வவ் அமைச்சுக்களின் செய லாளர்களே கூறவேண்டும் என்பதுடன் அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பில் கூடியளவான அக்கறையையும் செலுத்த வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



அரசாங்கம் திட்டமிட்டிருக்கின்ற அபிவிருத்தி இலக்கை வெற்றி கொள்வதற்கு அமைச்சின் செயலாளர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். மஹிந்த சிந்தனையின் வேலைத்திட்டத்தை அவ்வாறே முன்னெடுப்பதற்கு உழைத்து மக்களின் எதிர்பார்ப்பை ஈடுசெய்வதற்கு செயற்படல் வேண்டும். திட்டங்களை பிரதேசத்திற்கு மட்டுப்படுத்தாமல் விரிவுப்படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கான நியமன கடிதங்களை கையளித்து விட்டு அங்கு நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அமைச்சர்களுக்கு போலவே அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அமைச்சுக்கள் தொடர்பிலான முழுமையான பொறுப்பு இருக்கின்றது. அதனை எந்நேரமும் மனதில் நிலைநிறுத்தி கொண்டு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

அபிவிருத்தி திட்டங்களை ஒரு மாகாணம் அல்லது ஒரு மாவட்டத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தாமல் முழு நாட்டிலும் வாழ்கின்ற மக்களின் நலன்புரி விடயங்களை கட்டியெழுப்பும் வகையில் செயற்படல் வேண்டும். அதற்கான பொறுப்பு செயலாளர்களிடமே ஒப் படைக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தியடையாத மாகாணங்கள் மற்றும் மாவட்டங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி அவற்றை கட்டியெழுப் புவதற்கு கவனம் செலுத்த வேண்டும். அமைச்சுக்களின் செயலாற்றுகை மதிப்பீட்டு கூட்டத்தை மாதத்திற்கு ஒரு தடவையாவது நடத்தி புதிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராயவேண்டியது முக்கியமானதாகும்.

பாராளுமன்ற தேர்தலில் நாங்கள் மக்களிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கோரி நின்ற போது எதிர்க்கட்சிக்கு மூன்றிலொன்றுக்கு குறைவான நிலையை பெற்றுக் கொடுத்து எமக்கு விஷேட வெற்றியை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

1970,1977 ஆம் ஆண்டுகளில் தேர்தல்கள் அரசாங்கத்திற்கு எதிரானதாகவே இருந்தன. அந்த நிலைமை கடந்த தேர்தல்களில் முழுமையாக மாற்றப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருடங்களில் பெற்றுக் கொண்ட வெற்றியின் மூலமாக நாட்டை ஐக்கியப்படுத்தியதுடன் நாட்டை அபிவிருத்தி பாதைக்கு கொண்டு சென்றோம்.

மஹிந்த சிந்தனையும் மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கும் முன்வைக்கப்பட்டுள்ளது. இவற்றில் அமைச்சுக்களை மேம்படுத்துவதற்கு தேவையான விடயங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. அவற்றை முன்னெடுப்பது செயலாளர்களின் பொறுப்பாகும் என்றார். (2-4)

## நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க இலக்கிய் வட்டத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் பேரறிஞர் பிதா ரீ.எம். எவ்.லோங் அடிகளின் 49 ஆவது நினைவு தினம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். அருள் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அன்றைய தினம் காலை 6 மணிக்கு அடிகளின் சாந்திக்காக இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (2-4)

சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம். -என்.ஹில்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# காங்கேசன்துறை, மாவிட்டபுரத்தில் கல் அகழ்வைத் தடுப்பது யார்?

மிகப் பெரியதொரு யுத்தத்தின் பின்னர் யார் தோற்றார்களோ அவர்கள் எதிலுமே மௌனமாக இருப்பார்கள் என்ற கருத்து எங்கள் தமிழினத்திற்கு சாலப் பொருத்தமானதாகும்.

யுத்தத்தில் தோற்றுவிட்டோம் என்பதற்காக எல்லா விடயங்களிலும் மௌனமாக இருந்து விடுவது புத்திசாலித்தனமாகாது.

தோல்வி, வெற்றி என்பதெல்லாம் உரிமைகள் என்ற விடயத்துடன் தொடர்பு பட்டதல்ல.

அதாவது தோற்றவர்கள் தமது உரிமைகளை இழக்க வேண்டும் என்பதோ அல்லது வென்றவர்கள் மற்றவர்களின் உரிமையை தடுத்து தமது உரிமையை அதீதமாக்கிக் கொள்வதென்பதோ பொருளாகாது.

தத்தம் உரிமையை அனுபவித்தாக வேண்டும். இதில் யுத்தத்தின் வெற்றி, தோல்வி எந்த வகையிலும் தாக்கத்தை ஏற்படுத்த மாட்டா.

இருந்தும் எங்கள் அரசியல் தலைமைகள் தமிழர்களுக்கு ஏற்பட்ட யுத்த தோல்வியை முன்நிறுத்தி அரசுக்கு முன் கூனிக்குறுகி நின்றுதான் எங்களுக்கான அற்ப சொற்ப உரிமைகளை பெறவேண்டும் என எண்ணுகின்றனர்.

இஃது மகா தவறு. நாங்கள் யுத்தத்தில் தோற்றவர்களாக இருந்த போதிலும் எங்கள் உரிமைகளைப் பெறுவதில் மகாபலம் பொருந்தியவர்களாக இருக்க வேண்டும்.

இதற்காக எங்கள் மண்ணில் நடக்கின்ற அத்தனை விவகாரங்களையும் மக்கள் பிரதிநிதிகள் அறிவது அவசியமாகும்.

மக்கள் பிரதிநிதிகளாக இருப்பது மட்டும் எங்கள் உரிமைகளைப் பெற்று தருமாக இருந்தால் அதனை நாம் எப்பொழுதோ பெற்றிருக்க முடியும்.

மாறாக தமிழர் தாயத்தில் நடக்கக்கூடிய அத்தனை நீட்டூரங்களையும் தடுத்து நிறுத்த வேண்டும். இதனை பல்பரிமாணங்களில் செய்ய முடியும்:

காங்கேசன்துறை, மாவிட்டபுரம் போன்ற இடங்களில் தொடர்ச்சியாக இடம்பெறும் கல் அகழ்வு அந்தப் பகுதிகளை கடலாக்கும் அபாயத்தை கொண்டுள்ளது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

எங்கள் மண்வளம் சுரண்டப்படுவதன் காரணமாக காங்கேசன்துறை, மாவிட்டபுரம் போன்ற பிரதேசங்களை நாம் பறிகொடுப்பது மட்டுமன்றி கடலின் முன் நோக்குகை எங்கள் பூர்வீகத்தின் நில, நீர் வளங்களை நாசம் செய்யும் அபாயத்தையும் கொண்டுள்ளது.

இது விடயத்தை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிவாகை சூடிய மக்கள் பிரதிநிதிகள் தங்கள் முதலாவது பிரச்சினையாக எடுத்துக் கொண்டு தீர்வு காண்பது அவசியம்.

இதற்காக அவர்கள் அந்தப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று நிலைமையை அவதானிப்பதுடன் தற்போது கல் அகழப்பட்டுள்ள இடங்களை ஒளிப்பதிவில் ஆவணப்படுத்துதல், அப்பகுதி படை அதிகாரிகளுக்கு நிலைமையை தெளிவுபடுத்துதல், கூடவே கல் அகழ்வுத் தொழில் ஈடுபடும் நிறுவனங்கள் அதில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் நீதி மன்றத்தின் உதவியை நாடுதல் என்பன முக்கியமானதாகும்.

பொதுவில் பிரச்சினைகளுக்குரிய பல விடயங்களை நாம் மும்மொழிந்தாலும் அது தொடர்பில் எமக்கு சாதகமாக இருக்கக் கூடிய சட்டத்தின் உதவியை பெறுவதில் பின்னிற்கின்றோம்.

எது விடயத்திலும் சட்டத்தின் உதவியை நாடுவது நன்மை பயக்கும் என்பதால் காங்கேசன்துறை, மாவிட்டபுரம் போன்ற பகுதிகளில் இடம்பெறும் கல் அகல்வை தடுத்து நிறுத்துவதற்கு சட்டத்தின் உதவியை நாடவேண்டும்.

இதற்கு மேலாக குறித்த பிரச்சினையை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வருதல், நாடாளுமன்றத்தில் நிலைமையை விளக்குதல் என்ற ஒழுங்குபடிமுறைகள் மூலமாகவும் எங்கள் உரிமைகளை பெறவும் நிலைநாட்டவும் பாடுபடுவது காலத்தின் உடனடித் தேவையாகும்.

# நல்லன செய்வதால் நற்கதியடையலாம் சித்திரா பூரணவிரதம் உணர்த்தும் தத்துவம்

இந்துக்களின் சமய வழிபாடுகள் யாவும் வாழ்வியலுடன் இணைந்த சிறந்த தத்துவங்களையும் மக்கள் நல்வாழ்வு வாழ வழிகாட்டும் நெறிமுறைகளையும் கொண்டனவாக உள்ளன. இந்த விதத்திலே மாதந்தோறும்வரும் அமாவாசை பூரணை திதிகளும் குறிப்பிடத்தக்கனவாகும். அமாவாசைகளிற் தந்தையாரையும் பூரணநாளிற் தாயாரையும் அவர் வழி மூதாதையரை நன்றியுடன் போற்றிப்பணிதல் எம்மக்களின் மரபு ஆகும்.

மேலும் ஆடிமாத அமாவாசையும் சித்திரை மாதப் பூரணையும் தனிச்சிறப்புடன் கொண்டாடப்படுவதற்கு சித்திரை மாதத்திலே சித்திரை நட்சத்திரத்தையடுத்து வரும் பூரணதினம் சித்திரகுப்த்விரதம், சித்திராபௌர்ணமி விரதம் எனத் தான தர்மங்கள் செய்தும் சித்திர குப்த நாயனார் கதை படித்தும், கேட்டும் விரதமிருந்து வழிபாடுகள் செய்யப்படும். எமது வாழ்க்கையில் நாம் செய்யும் பாவ , புண்ணியங்கட்கு ஏற்ப எமக்கு மறுபிறவியும் நரகம், சுவர்க்கம் என்பனவும் அமையும் என்பதும் சித்திர குப்த நாயனார் கதை மூலம் எமக்கு நன்கு அறிவுறுத்தப்படுகின்றது.

### சித்திரகுப்த நாயனார் வரலாறு

உலகில் ஆன்மாக்கள் செய்யும் நல்வினை, தீவினைகட்கு ஏற்ப அவர்கட்குக் கணக்கு எழுதவேண்டிச் சிவபிரான் தம்மைப் போல ஒரு சித்திரத்தை ஒரு பொற்பலகையிற் தானியம் பரப்பி அதனில் வரைந்து அம்மையாரிடமும் அதைக் காட்டினார். அம்மையப்பர் பார்த்த அந்தச் சித்திரத்திலே ஒரு குழந்தை தோன்றியது . அதுவே சித்திர குப்த நாயனார் எனப் பெயர் கொண்டதாகும்.

இந்தச் சித்திர குப்த நாயனாருக்கு அம்மையப்பர் தமது திருவருட் சக்தியாலே வேண்டும் அதிகாரங்களைக் கொடுத்து உலக ஆன்மாக்களின் நல்வினை, தீவினைகளைக் கணக்கிட்டு அவரவர் பாவ, புண்ணியங்கட்கு ஏற்ப நன்மை, தீமைகளை அனுபவிக்கச் செய்யும் படி ஆக்ஞாபித்தார்.

### புராணங்கள்

இறைவன் கட்டளைப்படி சித்திரகுப்த நாயனார் யமதர்மராசனின் கணக்காளராக அமர்ந்து ஆன்மாக்களின் நல்வினை, தீவினைகளைப் பகுத்தறிந்து ஒப்புவிப்பதாகச் சூதமுனிவர் எடுத்துக் கூறியிருப்பதாகப் புராணங்கள் விளக்குகின்றன.

மேலும் திருவிளையாடற்புராணம் தேவேந்திரன் பூவுலகம் வந்து சிவபூசை வழிபாடுகள் செய்து மீண்டதினமாக சித்திரா பூரணையைச் சிறப்பித்துக் கூறுகின்றது.

சித்திர புத்திர நாயனார் கதையிலே இந்திராணியும் இந்திரனும் புத்திரப்பேறு வேண்டி வழிபட்டுப் புத்திரபாக்கியம் பெற்றதாகவும் அமராவதி எனும் செட்டிச்சியம்மை இவ்விரதத்தை நோற்காமல் அவமதித்ததாற் பெருந்துன்பத்திற்கு ஆளானதாகவும் எடுத்துக் கூறப்படுகின்றது.

### நல்லன செய்வதே நற்கதிக்கு வழி

சித்திரைக்கு சித்திரை சித்திரா பூரண வழிபாடுகள், புராணங்கள், சித்திர குப்த நாயனார் கதையாவும் மக்கள் வாழ்வில் நல்லன செய்வதன் மூலமே நற்கதி அடையும் முடியும் என்பதையே எடுத்துக் கூறுகின்றன. நல்லன செய்வதால் சுவர்க்கம் என்றும் தீயன செய்வதால் நரகம் என்றும் எம்மை நல்வாழ்வில் நாட்டமுறச் செய்வதாகவே இந்து சமய விரத வழிபாடுகள் நன்னெறி காட்டி நிற்கின்றன.

**நீர்வை மணி**

# ஹெக்நேலியகொடவின் மனுவை விசாரிக்க நீதிமன்றம் தீர்மானம்

ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நேலியகொடவை உயர் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்துமாறு கோரி அவரது மனைவி சந்தியா ஹெக்நேலியகொடவினால் தாக்கல் செய்யப்பட் ஆட்கொணர்வு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதென உயர்நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

ரஞ்சித் சில்வா மற்றும் விமல் லேக்கம்வசம் ஆகிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் மனு ஆராயப்பட்டது. மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர், இரகசியப் பொலிஸ் பிரதிக் காவல்துறை மா அதிபர், ஹோமாகம மற்றும் கொஸ்வத்தை காவல்துறை பொறுப்பதிகாரிகள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கிறிஷ்மல் வர்ணகுலசூரிய, சுனில் வட்டகல ஆகியோர் ஆஜராகி இருந்தனர். ஊடகவியலளார் ஹெக்நேலியகொட கடந்த ஜனவரி 24ஆம் திகதி இரவு காணாமல் போனதாகவும் அவர் பொலிஸாரினால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்று நம்பக்கூடிய தகவல்கள் இருப்பதால் அவரை உடனடியாக நீதி மன்றத்தி ஆஜர்படுத்துமாறு உத்தரவிட வேண்டுமென சட்டத் தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

முறைப்பாட்டுப் பிரதிகள் கிடைக்காத நிலையில் மனு அழுத்தங்களை ஏற்படுத்துவதாக இருக்காது என சுட்டிக்காட்டிய நீதியரசர்கள், ஹெக்நேலிய கொடவை கைது செய்தது அல்லது கடத்திச் சென்றது யார். எந்த நிறுவனம் என்பதை அறியாமல் எப்படி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிடுவதென நீதியரசர்கள்,மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பினர். (ச-5)

# புதிய அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களும் பதவி ஏற்கவுள்ளனர்

புதிய அமைச்சரவை அமைச்சர்களாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் அடுத்த வாரம் பதவி ஏற்கவுள்ளனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பூட்டானுக்கான தனது விஜயத்தை நிறைவு செய்து நாடு திரும்பியதும் இவர்கள் பதவி ஏற்றுக்கொள்வார்கள் என அரசாங்கத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை தவிர சரத்அமுனுகம, எஸ்.பி. திஸாநாயக்க மற்றும் கெகலிய ரம்புக்வெல ஆகியோரும் அமைச்சர்களாக பதவி ஏற்கவுள்ளனர். பைசர் முஸ்தபா பிரதி அமைச்சராக பதவி ஏற்கவுள்ளார். இதேவேளை முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி முடிபு எடுக்கப்படும் வரை அவருக்கு அமைச்சர் பதவியை வழங்குவதில்லை என ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சு பதவி வழங்கப்பட்டபோதிலும் அவர் அதனை ஏற்கவில்லை. இந்த நிலையில் அவருக்கு கால்நடை அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்ட மைப்பு அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது. (2-4)

# புதிய ஜனநாயக கட்சியின் மேதினக் கூட்டம்


(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளர்களின் தினமான மேதினத்தை நினைவு கூர்ந்து புதிய ஜனநாயக கட்சி யாழ்ப்பாணத்திலும் அட்டனிலும் கூட்டங்களை நடத்தவுள்ளது.

இதில் மே முதலாம் திகதி சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ் றிம்மர் மண்டபத்தில் (மணிக்கூட்டு கோபுர அருகாமை) மேற்படி மேதினக் கூட்டம் கட்சியின் வடபிரதேச செய லாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், சோ.தேவராசா, க.தணிகாசலம், ரி.வி.கிருஷ்ணசாமி, கா.பஞ்சலிங்கம், மு.தியாகராசா உட்பட மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உரையாற்றுவர்.

மலையத்தின் ஹட்டன் நகரில் சக்தி மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா தலைமையில் நடைபெறும். தொழிற்சங்க வாலிபர் அணிகளின் பிரதிநிதிகள் என்பனவற்றின் பிரதிநிதிகள் உரையாற்றுவர் .தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் பல்சுவை



உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்குமே கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

முன்னேறிக் கொண்டே இரு! முறையற்ற ஒரு செயலைச் செய்துவிட்டதாகவே நீ நினைத்தாலும் அதற்காக நீ திரும்பிப் பார்க்க வேண்டாம். அவை போன்ற தவறுகளை முன்பு செய்யாமல் இருந்திருந்தால் இன்று நீ இருக்கும் நிலையை அடைந்திருக்க முடியும் என்று இப்போது நம்புகிறாயா? நீ செய்த தவறுகளை வாழ்த்து; அந்தத் தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

# ஜிமெயிலில் எந்த பைலையும் அனுப்ப



இமெயில் பயன்படுத்தும் அனைவரும் இருந்துவிட்டுப் போகட்டுமே என்று ஜிமெயில் எக்கவுண்ட் ஒன்றினைத் தொடங்குவார்கள். பின் அதனையே தங்கள் மெயின் எக்கவுண்ட்டாக வைத்துக் கொள்வார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு.

ஜிமெயில் தரும் வரையறை இல்லாத டிஸ்க் இடம், வைரஸை அண்டவிடாத ஸ்கானர், இமெயிலுடன் ஒட்டி வரும் பைல்களைக் கண்காணிக்கும் சாதனம் எனப் பல விடயங்களைக் கூறலாம்.

நமக்கு வரும் இமெயிலுடன், அல்லது நாம் அனுப்பும் இமெயிலுடன் இணைக்கப்பட்டு வரும் பைல்களை, ஜிமெயில் தளத்தில் உள்ள அண்டி வைரஸ் ஸ்கானர் சோதனை செய்து, வைரஸ் எதுவும் இல்லை என்ற பின்னரே, நம்மை டவுண்லோட் செய்திட வழிவிடும்.

இதனாலேயே exe,dll,ocx,com or bat போன்ற துணைப்பெயர்கள் கொண்ட பைல்களை ஜிமெயில் இணைக்க விடுவதில்லை. ஜிமெயிலை ஏமாற்றுவதாக நினைத்து, இந்த பைல்களை ஸிப் செய்து zip,tar,tgz,taz,z,gz என்ற ஏதேனும் ஒரு போர்மட்டில் ஸிப் பைலாக அனுப்பினா லும், ஜிமெயில் கண்டு கொண்டு தடுத்துவிடும்.

(ஆனால் rar என்ற ஸிப் பைலுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கிறது ஜிமெயில்) ஆனால் இந்த தடை நமக்கு சில நேரம் எரிச்சலைத் தரும்.

எடுத்துக்காட்டாக நண்பர் ஒருவருக்கு Firefox Setup1.5exe4.98 MB என்ற பைலை அனுப்ப முயற்சித்தேன்.

ஜிமெயில் This is an executable file. For Security reasons, Gmail does not allow you to send this type of File என்ற எச்சரிக்கைச் செய்தியை தந்து அதனை அப்லோட் செய்திட மறுத்தது. இங்கு என்ன நடக்கிறது என்றால், ஜிமெயிலில் உள்ள வைரஸ் ஸ்கானர் இந்த பைலை ஸ்கான் செய்திடாமல், இதன் துணைப் பெயர். exe என்பதால் தொடக்கத்திலேயே இணைப்பதற்கு எடுத்துக்கொள்ள மாறுகிறது.

யாஹூ தளம் சார்ந்த சேர்வரிலும் இதே போன்ற ஸ்கானர் உள்ளது. ஆனால் யாஹூ. exeபைல்களை ஏற்றுக்கொள்கிறது. யாஹூ மெயில் சைமண்டெக் சொப்ட்வெயர் தொகுப்பினை ஸ்கான் செய்திடப் பயன்படுத்துவதாக அறிவித்துள்ளது. ஆனால் ஜிமெயில் எந்த சொப்ட்வெயர் தொகுப்பினை பயன்படுத்தி ஸ்கான் செய்கிறது என்று நமக்கு அறிவிக்கவில்லை.

இந்த சூழ்நிலையில் ஜிமெயில் பயன்படுத்துபவர்கள், இத்தகைய பைல்களை அனுப்ப எந்த வழிகளைக் கையாளலாம் என்று பார்க்கலாம்.


முதலாவதாக Rapidshare, Mega upload அல்லது Yousendit போன்ற தளங்களைப் பயன்படுத்தி அனுப்ப விரும்பும் பைல்களை அப்லோட் செய்திடலாம். பின்னர் இந்த தளம் வழங்கும் லிங்க்கினை ,ஜிமெயில் மூலம் அதனை அனுப்புபவருக்கு தெரிவித்து விடலாம்.

இரண்டாவதாக பைலின் பெயரை சற்று மாற்றி,ஜிமெயில் ஸ்கானரை முட்டாளாக்கலாம். எடுத்துக்காட்டாக Adobe Reader .exeஎன்ற பைலின் பெயரை Adobe Reader.exe .removeme என மாற்றி அமைத்து, நண்பருக்கு இந்த மாற்றம் குறித்து தெரிவிக்கலாம். அவர் இதனைப் பெற்ற பின்னர் பைலின் பெயரை மாற்றி பயன்படுத்தலாம்.

மூன்றாவதாக நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட exe பைல்களை அனுப்ப வேண்டும் என்றால் ,அவை அனைத்தும் ஸிப் செய்து பின்னர் , அந்த ஸிப் பைலின் துணைப்பெயரை மாற்றி அனுப்பலாம்.

நான்காவதாக WinRARஎன்ற ஸிப் பைல் டூலைப் பயன்படுத்தி ஸிப் செய்து அனுப்பலாம். ஏனென்றால் ,ஜிமெயில் இதனை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் முதலாவதாக சொல்லப்பட்டுள்ள வழி தான் சரியான வழி. மற்ற வழிகள் கூகுள் அமைப்பை ஏமாற்றுவதாகவே உள்ளன. இது கூகுள் எக்கவுண்ட் பெறுகையில் நாம் ஒத்துக்கொண்ட கட்டுப்பாடுகளை மீறுவதாகும்.

# கற்றாரைக் கற்றாரே




## இந்த வார இணையதளம்

கற்றுத் தேர்ந்தவர்களோடு நாம் பழகினால் நாமும் பல விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம். மேலும் நாம் கற்றதையும் மற்றவரோடு பகிர்ந்து கொள்ளலாம். இதற்கு இன்டர்நெட்டில் எங்கு செல்வது? நமக்கென ஒரு வலைமனை (Blog) அமைத்து வைத்தாலும் அனைவரும் வந்து படிப்பார்கள். சரியான கருத்துரைகளைப் (Comments) பதிவார்கள் என்புது என்ன உறுதி?

இந்த குறையைப் போக்கும் வகையில் கற்றவர்கள் கலந்துரையாடி தங்களுக்குத் தெரிந்ததைப் பகிர்ந்து கொள்ள இணையத்தில் ஒரு தளம் உள்ளது. அதன் முகவரி www. wepapers.com இது ஒரு கல்வியாளர்களின் சோஷியல் நெட்வேர்க் என்று சொல்லலாம். இதில் பெரும்பாலும் பல்கலை மற்றும் கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள், ஆய்வுமாணவர்கள் இடம்பெறுகின்றனர்.

இதில் கலந்து கொள்வதன் மூலம் இதில் உள்ள அறிவு சார்ந்த கட்டுரைகளைப் படிக்கலாம். நமக்குத் தெரிந்ததை இதில் பதிப்பிக்கலாம். ஆய்வு சுருக்கங்கள் abstracts கட்டுரைகள், உரைக்குறிப்புக்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை இங்கு பெருமளவில் இடம்பெற்றுள்ளன.

இவற்றை வகைப்படுத்தி பட்டியலிட்டுள்ளனர். 40 வகைகளில் இவை கிடைக்கின்றன. உலகின் அனைத்து பொருட்களும் இவற்றில் அடங்கும். இந்த கட்டுரைகள் பிளாஷ் தொழில் நுட்பத்தில் காட்டப்படுகின்றன. (யு-ட்யூப் மற்றும் பிற வீடியோ கிளிப்களைக் காட்டுவது போல) கட்டுரைகளின் சுருக்கம் அல்லது ஒரு சிறிய முன்னோட்டத்தினைப் பார்த்து பின் அவற்றை டவுண்லோட் செய்திட வேண்டுமா என்பதனை முடிவு செய்து டவுண்லோட் செய்திடலாம்.

இந்த தளத்தின் இடது பக்கம் உள்ள பிரிவில் நாங்கள் விரும்பும் கட்டுரைகள் (Papers We Like) என்று ஒரு பட்டியலில் அப்போது பதியப்பட்ட சிறந்த ஏழு கட்டுரைகள் காட்டப்படுகின்றன. நீங்களாக ஒரு பொருள் குறித்து கட்டுரை ஒன்றைத் தேட வேண்டும் எனின் நடுப்பக்கத்திற்குச் செல்லலாம். இங்கு உள்ள கட்டத்தில் பொருள் அப்போது பதியப்பட்ட சிறந்த 7 கட்டுரைகள் காட்டப்படுகின்றன. நீங்களாக ஒரு பொருள் குறித்து கட்டுரை ஒன்றைத் தேட நடுப்பக்கத்திற்குச் செல்லலாம்.

இங்குள்ள Search கட்டத்தில் பொருள் குறித்த சொல்லை டைப் செய்து எணிஎன்பதில் கிளிக் செய்தால் ,உடன் கட்டுரைகளின் பட்டியல் கிடைக்கும்.

நிச்சயமாக நீங்கள் அதிசயப்படத்தக்கவகையில் தேடுவதற்கு கொடுத்த பொருள் குறித்து பல்வேறு கோணத்தில் கட்டுரைக ளின் தலைப்பைக் காணலாம்.

நீங்கள் உங்கள் கட்டுரையை இதில் பதிய வேண்டுமா? இதில் பதிவது என்பது மிக மிக எளிமையானது. பெயர் ,கல்லூரி அல்லது பல்கலைமுகவரி ,மின் அஞ்சல் முகவரி ஆகியவற்றைக்கொடுத்து Capcha சோதனையை முடித்தால் போதும். பின்னர் Sign Up செய்து உள்ளே நுழையலாம்.

நீங்கள் ஒரு பொருள் குறித்து கற்றுக் கொடுக்க எண்ணினால் , அல்லது கோர்ஸ் லீடர் என்ற பிரிவின் மூலம் செல்லலாம் அல்லது உங்கள் கட்டுரையை உங்கள் மாணவர்கள் அல்லது மற்ற ஆய்வா ளர்களுடன் இணைந்து குழுவாக அமைத்தி டலாம்.

கட்டுரைகளை அப்லோட் செய்வதும் மிக எளிதாகவுள்ளது. அப்லோட் செய்த பின்னர், அந்த கட்டுரை குறித்த சுருக்க தகவல்களை நீங்கள் அதற்கான படிவத்தில் தரவேண்டும். கற்கும் மாணவர்களுக்கும் ,கற்றுக்கொடுக்க எண்ணும் பேராசிரியர்களுக்கும், ஆய்வு செய்து வரும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் ஓர் அருமையான இணையத்தளம் இது.

இஸ்ரேல் நாட்டின் ஜெருசலேம் நகரைச் சேர்ந்த Hanan Weiskopf மற்றும் Ehud Zamir என்ற இரு மாணவர்களால் இந்த தளம் தொடங்கப்பட்டு நடத்தப்படுகிறது. பல நாடுகளில் இருந்து இதற்கான நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இந்த தளத்தின் முகவரி **www.wepapers.com**




ஆர்.யூ.பாலமுருகன்

# மீடியா பிளேயரில் சிடியில் எழுதலாம்

நீங்கள் விண்டோஸ் 7 சிஸ்டத்திற்கு மாறிவீட் டீர்களா? அப்படியானால் இந்த முக்கியமான வசதியைத் தெரிந்து கொள்ளுங்கள். அதில் உள்ள மீடியா பிளேயரில் உங்கள் சிடி மற்றும் டிவிடியில் டேட்டாவினை எழுதலாம். வீடியோ பைல்கள் மற்றும் படங்களையும் இதில் பதியலாம். எப்படி என்று பார்க்கலாமா! ஓடியோ சிடியாக மாற்றுகையில் ஓடியோ அல்லது வீடியோ பைல்களின் போர்மட் மாற்றப்படுவதில்லை. தரமும் குறைவதில்லை.



முதலில் Start All Programs windows Media player எனச் செல்லவும். அதன் பின்பிளேயர் லைப்ரேரியில் Burn என்னும் டேப்பை கிளிக் செய்து பின் Date DVD அல்லது CD என்பதில் தேவையானதைத் தேர்ந்தெடுக்கவும். இனி காலியாக உள்ள சிடியை உங்கள் கணனியில் சிடி ட்ரேயில் போடவும்.

Auto Play டயலொக் பொக்ஸ் வந்தால் அதனை குளோஸ் செய்திடவும்.

சிலரின் கணனியில் ஒன்றுக்கு மேற்பட்ட சிடி டிரைவ் இருக்கலாம். இதில் எந்த டிரைவ் என்பதனையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அடுத்து எந்தப் பாடல் பைல்களைப் பதிய வேண்டும் எனத் தேர்ந்தெடுக்கவும். எழு தப் பட வேண்டிய பாடல்களை Player Library இல் உள்ள Details Pane லிருந்து வலது பக்கம் உள்ள List Pane இல் போடவும்.

இங்கே நீங்கள் விரும்பும் வகையில் பாடல் களின் வரிசையை மாற்றலாம்.

இந்த லிஸ்ட்டில் இருந்து பாடல்களை நீக்க வேண்டும் என்றால் இதில் ரைட் கிளிக் செய்து Remove என்பதில் கிளிக் செய்திடவும்.

லிஸ்ட் அமைப்பது முடிந்த பின் Burn கிளிக் செய்து CD பதிவதை தொடங்க முடிக்க.

# இருபது-20 கிரிக்கெட்டில் சுழல் ஆதிக்கம்


அனில் கும்ளே


ஷேன் வோர்ன்

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சுழல் பந்துவீச்சாளரின் ஆதிக்கம் அதிகரித்துவருகிறது. இதனை மூன்றாவது ஐ.பி.எல். இருபது-20 தொடர் உறுதி செய்தது. முன்பு போட்டிகளில் முதல் ஓவரை வேகப்பந்து வீச்சாளர்கள் வீசினர்.

தற்போது ஐ.பி.எல். போட்டிகளில் சுழல் பந்துவீச்சாளர்கள் முதல் ஓவரை வீசுவதை காண முடிந்தது. கடந்த 2008ஆம் ஆண்டு முதலாவது ஐ.பி.எல். தொடர் நடந்தது.

இத் தொடரில் 3 போட்டிகளில் முதல் ஓவரை சுழற் பந்து வீச்சாளர்கள் வீசினர். இதில் பெங்களூர் அணியின் கும்ளே இரண்டு முறையும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முரளிதரன் ஒரு முறையும் வீசினர் ஆனால் இவர்களால் விக்கெட் கைப்பற்ற முடியவில்லை.

### கும்ளே ஆறுதல்

கடந்த 2009ஆம் ஆண்டு இரண்டாவது ஐ.பி.எல். தொடர் தென்னாபிரிக்காவில் நடந்தது. இத் தொடரில் 12 போட்டிகளில் முதல் ஓவரை சுழற் பந்துவீச்சாளர்கள் வீசினர்.

இதில் அதிகபட்சமாக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் யூசுப்பதான் 4 முறை வீசினார். இவரைத் தொடர்ந்து பெங்களூர் அணி யின் கும்ளே, பஞ்ஜாப் அணியின் ரமேஸ் பவார் தலா 3 முறை வீசினார். இவர்களில் அனில் கும்ளே ஒரு போட்டியில் முதல் ஓவரில் விக்கெட் வீழ்த்தினார்.

### ஹயில் நம்பிக்கை

தற்போது நடந்து முடிந்த மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் முதல் 50 லீக் போட்டிகளில் 19 முறை, முதல் ஓவரை சுழற்பந்து வீச்சாளர்கள் வீசியுள்ளனர்.

இதில் 5 விக்கெட் வீழ்த்தப்பட்டது. அதிகபட்சமாக 6 முறை முதல் ஓவரை வீசிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் யூசுப்பதான் ஒரு விக்கெட் கூட பெறவில்லை.

மூன்று போட்டியில் முதல் ஓவரை வீசிய சென்னை சுப்பர்கிங்ஸ் அணியின் அஷ்வின் ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

கொல்கத்தா அணியின் கிறிஸ் ஹயில் (2 விக்கெட்), மும்பை அணியின் ஹர்பஜன் (ஒரு விக்கெட்), தலா 2 போட்டியில் முதல் ஓவரை வீசினர். ஒரு போட்டியில் முதல் ஓவரை வீசிய டில்லி அணியின் அமித் மிஷ்ரா ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

### ஓஜா அபாரம்

லீக் சுற்றின் முடிபில் இத் தொடரில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் வரிசையில் டெக்கான் அணியின் சுழற்பந்துவீச்சாளர்கள் பிரக்ஜன் ஓஜா (20 விக்கெட்) முன்னிலை வகிக்கின்றார். இவரைத்தவிர அமித் மிஷ்ரா (17 விக்கெட்), ஹர்பஜன் (15 விக்கெட்), முரளிதரன் (13 விக்கெட்), அஷ்வின் (12 விக்கெட்), கும்ளே (12 விக்கெட்), பியூ சாவ்லா (12 விக்கெட்) உள்ளிட்ட சுழற்பந்துவீச்சாளர்கள் முதல் 10 வரிசையில் இடம் பிடித்துள்ளனர்.

இந்த முன்னேற்றத்தை பார்க்கும் பொழுது நடக்கவுள்ள இருபது-20 உலகக் கோப்பை தொடரில், சுழற் பந்துவீச்சாளர்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சம்பியன்ஸ் லீக் தொடர்; இங்கிலாந்து அணிகளுக்கு சிக்கல்

(லண்டன்)

தென்னாபிரிக்காவில் நடக்கவுள்ள இரண்டாவது சம்பியன்ஸ் லீக் தொடரில் இங்கிலாந்து உள்ளூர் அணிகள் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் வரும் செம்ரம்பரில் (10 முதல் 26 வரை) தென்னாபிரிக்காவில் நடக்கவுள்ளது. இதில் இந்தியாவிலிருந்து சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிகள் பங்கேற்கின்றன.

தவிர அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்திலிருந்து 2 அணிகளும் இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் நியூசிலாந்தில் இருந்து தலா ஒரு அணியென மொத்தம் 12 அணிகள் இத் தொடரில் பங்கேற்கும்.


ஆண்டின் சிறந்த இங்கிலாந்து கால்பந்து வீரர் விருதை, வெய்ன் ரூனே கைப்பற்றினார். உயரிய விருதுடன் ரூனே.

கடந்த ஆண்டு நடந்த முதலாவது சம்பின்ஸ் லீக் தொடரில் இங்கிலாந்திலிருந்து சசக்ஸ், சாமர்செட் என இரண்டு அணிகள் பங்கேற்றன. இந்நிலையில் இந்தத் தொடரில் இங்கிலாந்தில் அணிகள் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் வரும் செப்ரம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை இங்கிலாந்து அணி பாகிஸ்தானுடன் ஒருநாள் போட்டித் தொடரில் பங்கேற்கின்றது. தவிர இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை (இ.சி.பி.) சார்பில் நடத்தப்படும் 40 ஓவர் போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளும் இந்தத்திகதிகளில் நடக்கிறது.

இது குறித்து இ.சி.பி.யின் முக்கிய அதிகாரி டேவிட் கூலியர் கூறுகையில், குறிப்பிட்ட திகதிகளில் இங்கிலாந்தில் போட்டிகள் நடப்பதால் எங்கள் அணிகள் பங்கேற்கயியலாத நிலை ஏற்பட்டுள்ளது. தவிர உள்ளூர் போட்டிகள் முக்கியம் என்பதை அனைத்து கழகங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன என்றார்.

# ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் தொடர்ந்து விளையாடுவேன்

## சச்சின் டெண்டுல்கர் தெரிவிப்பு

(மும்பை)

ஐ.பி.எல். போட்டியில் தொடர்ந்து விளையாடுவேன் என மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடந்தது. இதன் இறுதிப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியிடம் தோல்வியடைந்தது.

இது குறித்து மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் கூறியதாவது,

லீக், அரையிறுதிப் போட்டியில் அசைத்திய மும்பை அணி இறுதிப் போட்டியில் சோபிக்கத்தவறியது வருத்தமளிக்கிறது.

இப் போட்டியில் ரெய்னா கொடுத்த இரண்டு சுலப பிடிவாய்ப்பை கோட்டைவிட்டது எதிரணிக்கு சாதகமாக அமைந்தது.


இதேபோல் துடுப்பாட்டத்தில் முதல் 10 ஓவரில் போதுமான ஓட்டங்கள் சேர்க்கத் தவறிவிட்டோம். இது பின்னால் களமிறங்கிய வீரர்களுக்கு நெருக்கடியாக அமைந்தது. அதிரடி வீரர் பொல்லாட்டை முன்னதாக களமிறக்க தவறிவிட்டோம்.



இத்தொடரில் மும்பை அணியின் வெற்றிக்கு முழு ஆதரவளித்த ரசிகர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் இதே போல் வெற்றி, தோல்வியின் போது எங்களுக்கு ஊக்கமளித்த அணி நிர்வாகிகளுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

ஐ.பி.எல். தொடரில் விளையாடுவது சிறந்த அனுபவம் அளித்துள்ளது. இத் தொடரில் ஒவ்வொரு போட்டியிலும் மிகவும் ரசித்து விளையாடினேன் எனவே தொடர்ந்து ஐ.பி.எல். தொடரில் பங்கேற்பேன். இவ்வாறு சச்சின் கூறினார்.

# திருமண வரவேற்பு அழைப்பிதழை விற்றதாக மலிக் மீது குற்றச்சாட்டு



(சியால்கோட்)

திருமண வரவேற்பு அழைப்பிதழை விற்றதாக சொகைப் மலிக் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஷா, பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொகைப் மலிக் ஆகியோரது திருமணம் கடந்த 12ஆம் திகதி ஐதராபாத்தில் நடந்தது. இதற்குப்பின் இந்த ஜோடி தற்போது பாகிஸ்தான் சென்றுள்ளது.

சொகைப் மலிக்கின் சொந்த ஊரான சியால்கோட்டில் உள்ள கொக்கி மைதானத்தில் நடந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கலந்து கொண்டனர்.

### புதிய சர்ச்சை

இந்நிகழ்ச்சிக்கான வரவேற்பிதழை மலிக் விற்றதாக புதிய சர்ச்சை எழுந்துள்ளது. ரூபாய் 5 ஆயிரம் முதல் ரூபாய் 15 ஆயிரம் வரை அழைப்பிதழ்கள் விற்கப்பட்டுள்ளன. இதனால் ரசிகர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

மலிக்கின் தீவிர ரசிகரான அபித் அலி என்பவர் சியால்கோட் நீதிமன்றத்தில் வழக்கொன்றை பதிவு செய்துள்ளார். அதில் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்க அழைப்பிதழ்களை மலிக் விற்பனை செய்துள்ளார். இதன் மூலம் ரசிகர்களின் மனதை மலிக் வேதனைப்படுத்தியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை விசாரித்த நீதிபதி வரும் மே 30 ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு மலிக்கிற்கு சம்மன் அனுப்பி உத்தரவிட்டுள்ளார். இந் நிகழ்ச்சிக்கென மின்சாரம் வீணடிக்கப்பட்டுள்ளதாக மலிக் மீது மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### சானியா எரிச்சல்

திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சுமார் ஆயிரம் பேருக்கு மட்டுமே அழைப்பிதழ் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் 2 ஆயிரம் பேர் வரை கலந்து கொண்டனர்.

இதில் பலருக்கு அழைப்பிதழ் கொடுக்கப்படவில்லை. பாதுகாப்பு ஏற்பாடுகளும் திருப்தி அளிக்கவில்லை.

இதனால் சானியா சற்று அதிகமாகவே எரிச்சல் அடைந்துள்ளார். மலிக்குடன் சானியா வாக்குவாதம் செய்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இப்பிரச்சினைகாரணமாக சானியா-மலிக் ஜோடி நிகழ்ச்சி முடிவதற்கு முன்னதாகவே வீட்டுக்கு திரும்பினர்.

# நடிகை அசின் வீட்டில் ஐ.பி.எல். பார்த்தார் தோனி



(சென்னை)

சென்னை சுப்பர் கிங்ஸ் அணித்தலைவர் தோனி மும்பையில் உள்ள நடிகை வீட்டுக்குச் சென்று அவருடன் இணைந்து ஐ.பி.எல். போட்டியைப் பார்த்து ரசித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளது.

சில காலமாக லட்சுமி ராயுடன் இணைந்த தோனி சென்னைக்கு வரும்போதெல்லாம் தவறாமல் லட்சுமி ராயைப் பார்ப்பார். அத்துடன் ஒரு முறை தோனி தனது வீட்டுக்கு லட்சுமி ராயை அழைத்துச்சென்று வீட்டாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

இந் நிலையில் லட்சுமி ராய் இடத்திற்கு அசின் வந்து விட்டார். அசின் மும்பையில் ஒரு வீடு வாங்கியுள்ளார். அத்துடன் ஹிந்திப் படங்களில் அவர் நடித்து வருகிறார்.

முதலில் அசினுடன் அவரது அப்பாவும் தங்கியிருந்தார். பின்னர் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு வரவே அப்பா தனியாகப் போய்விட்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில் கடந்த 21ஆம் திகதி லோகன்ட்வாலா பகுதியில் உள்ள அசினின் வீட்டில் தோனி அசினுடன் இணைந்து மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிகள் மோதிய அரையிறுதிப் போட்டியை பார்த்ததாக செய்திகள் வெளியாகியுள்ளது.

தோனியுடன் இணைந்து 2 விளம்பரப் படங்களில் அசின் நடித்த போதுதான் அவர்களுக்குள் நட்புஏற்பட்டதாம். இந்த நட்பு தற்போது மேம்பட்டிருப்பதாகவும் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சபை, யாழ்ப்பாணம்



# வன்னிப் பாடசாலை ஆசிரியர்களின் சுயவிபரக் கோவை தயாரிப்பு

(திருகோணமலை)

வன்னிப் பாடசாலைகளில் கடமையாற்றி தற்போது யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்களின் சுயவிபரக் கோவை கிடைக்கப் பெறாதவர்களுக்கு புதிய சுய்விபரக் கோவை தயாரிக்கும் பணி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகள் வன்னியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்டன.

இதில் முதற்கட்டமாக மீட்கப்பட்ட ஒரு தொகுதி சுயவிபரக் கோவைகள் தொடர்பான விபரம் பத்திரிகை மூலம் அறிவிக்கப்பட்டு உரிய ஆசிரியர்களினால் உறுதிப்படுத்தப்பட்டது.

அடுத்து இரண்டாம் கட்டமாக மீட்கப்பட்ட ஒரு தொகுதி சுயவிபரக் கோவைகள் தொடர்பில் உரிய ஆசிரியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டது.

இந் நிலையில் கிடைக்கப் பெறாத சுயவிபரக் கோவைகள் புதிதாகத் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. இதற்காக வடக்கு மாகாண நிலையில் விசேட குழுவும் கல்வி வலய நிலையில் உப குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய சுயவிபரக் கோவை கிடைக்கப் பெறாத ஆசிரியர்களுக்கு புதிய சுயவிபரக் கோவைகள் தயாரிக்கப்படவுள்ளது. இதில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் உள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சுயவிபரக் கோவை தயாரிக்கும் பணி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த தலா ஒவ்வொரு உத்தியோகத்தர் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் விசேட பிரிவில் கடமையாற்றுவார்கள்.

இவர்களுக்கான வழிகாட்டல்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர் வழங்குவார்.

எனவே சுயவிபரக் கோவை கிடைக்கப் பெறாத ஆசிரியர்கள் தமது பிறப்புச் சான்றிதழ், முதல் நியமனக் கடிதம், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, உயர் தரப் பரீட்சை பெறுப்பேற்றுச் சான்றிதழ்கள், பயிற்சிச் சான்றிதழ்கள், பட்டச் சான்றிதழ், பதவியுயர்வுச் சான்றிதழ் ஆகியவற்றின் போட்டோப் பிரதிகளை கோவை ஒன்றிலிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு நாளை மறுதினம் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் புதிய சுயவிபரக் கோவை தயாரிக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கினால் கோவைகள் தயார்படுத்தப்பட்டதும் உரிய ஆசிரியர்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்த்து வைக்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார். (ச-5)

## பிள்ளையான் தலைமையிலான குழு அடுத்த மாதம் இந்தியா பயணம்

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் குழு ஒன்று இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இந்த விஜயம் அடுத்த மாதம் இடம்பெறவிருப்பதாகக் கட்சித் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விஜயத்தின் போது இந்திய அரசாங்கத்தின் பல்வேறு உயர்மட்டப் பிரதிநிதிகளைச் சந்திக்கவிருப்பதாகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

தற்போது கட்சியின் கொள்கைகள் மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள் குறித்து இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயம் அண்மையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் இலங்கைக்கு வந்திருந்த வேளையில், சந்திரகாந்தனைச் சந்தித்தபோது விடுத்த அழைப்பின் அடிப்படையில் அமையவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஆசிரியர்களைக் கடமைக்குத் திரும்புமாறு...

னியில் மீள ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் தற்போதும் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் உள்ளனர்.

இந் நிலையில் முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களிலுள்ள 9 பாடசாலைகள் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டது.

இதில் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயம், ஒட்டிசுட்டான் இந்து வித்தியாலயம், கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, முத்தயன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை, முத்தயன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, திருமுறிகண்டி இந்து வித்தியாலயம், பனிச்சம்குளம் அ.த.க. பாடசாலை ஆகிய 7 பாடசாலைகளும்,

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் வற்றாப்பளை மகா வித்தியாலயம், முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே யாழ்.மாவட்ட பாடசாலைகளில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி 9 பாடசாலைகளையும் சேர்ந்த ஆசிரியர்கள் தமது கடமையைப் பொறுப்பேற்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அத்துடன் கடமையைப் பொறுப்பேற்றதும் மே மாதச் சம்பளம் உரிய பாடசாலைகள் ஊடாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## வடக்கில் இடம்பெறும் குற்றச் செயல்கள்...

மும் பீதியும் அடைந்துள்ளனர்.

அப்படிச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று அரசு தரப்பில் வெளியிடப்படும் செய்திகள் கடத்தல்கள், கப்பம் பெறுதல் அவைகளுக்காகவே கொலைகள் தொடர்வதை மூடி மறைக்கவும் அச் சம்பவங்கள் தொடர்வதற்குமே வழி வகுப்பதாகும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் திருச்செல்வம் கபிலநாத் 14.03.2010 இல் கப்பம் பெறுவதற்குக் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம்.

வவுனியாவில் இளைஞன் கிருஷ்ண கோபாலன் 28.03.2010 இல் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவம்.

வன்னியிலிருந்து மானிப்பாய் வந்த இளம் பெண் 18.04.2010 இல் கடத்திக் கற்பழிக்கப்பட்ட சம்பவம்.

யாழ்.நவாலியிலும் மானிப்பாயிலும் 20.04.2010 இல் மகேந்திரன் மற்றும் மகேஸ்வரன் ஆகிய இருவர் கடத்தப்பட்ட சம்பவம்.

வவுனியாவில் 25.04.2010 இல் அரச மருத்துவமனைப் பக்கத்தில் தம்பிராஜா ஜெயந்தன் கடத்தப்பட்ட சம்பவம் போன்றவை தொடர்பில் அதற்கான காரணங்கள், கைது செய்யப்பட்டதான தகவல்கள் எதுவும் இல்லை.

இச் சம்பவங்களுக்குப் பின்னால் செயற்பட்டு வரும் நபர்கள், அரசியல் சக்தி எது என்ற விபரங்களைக் காவல்துறைத் தலைமையகம் வெளியிட வேண்டும் என வலியுறுத்துகின்றேன்.

இத்தகைய தொடர் கதைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என வட பகுதிக்குப் பொறுப்புள்ள பாதுகாப்புத் தரப்பினரையும் அரசையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன்.

இத்தகைய கடத்தல்கள், கப்பம் பெறுதல், கற்பழிப்பு, கொலைகள் தொடர்பில் உண்மையறியும் உரிமையின் அடிப்படையில் பொதுநல வழக்குகளைத் தாக்கல் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இரத்தத்தை உறைய வைக்கும் பீதியும் அச்சமும் நிறைந்த இத்தகைய செயல்கள் தொடர்வதற்குப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். இத்தகைய ஈனச் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என அழைப்பு விடுகின்றோம்.

அரசின் பாதுகாப்பிலும் அரசின் செல்வாக்கையும் பயன்படுத்தி இத்தகைய செயல்களின் பின்னால் இருக்கும் சக்திகள் இனங்காணப்பட வேண்டும்.

சட்டம், ஒழுங்கு, நீதியிருப்பதாக இருந்தால் இக் கொடூரச் சம்பவங்களுக்குப் பின்னால் இருப்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அரசும் பாதுகாப்புத் துறையும் இத்தகைய சம்பவங்களை உடன் தடுத்து நிறுத்த வேண்டும்.

அப்பாவிப் பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகள், சுதந்திர நடமாட்டம், பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய அவசியத்தை வற்புறுத்துகின்றோம் என்றுள்ளது. (ச)

## மகிந்த...

குறித்து இந்தப் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்படவுள்ளது. இலங்கையில் அதிகாரத்தைப் பரவலாக்கும் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் சாசனம் சம்பந்தமான திருத்தங்கள் இந்திய நிபுணர்களினால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இதன் முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாடுவது இந்த இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளின் மற்றுமொரு நோக்கம் எனவும் கூறப்படுகின்றது.

புதிய சமஷ்டி அரசியல் சாசனம் இந்தியாவின் அதிகாரப் பரவலாக்கத்தை ஒத்ததாக இருக்கும் எனவும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை அறிமுகப்படுத்துவது போன்ற திருத்தங்கள் அதில் அடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## ஐ.நா.அரசியல் பிரதிநிதி பொஸ்...

அடுத்த மாதத்தின் நடுப் பகுதியளவில் லியன் பொஸ்கோ இலங்கைக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நிபுணர் குழு நியமனம் குறித்து ஆலோசனை நடத்தவே லியன் பொஸ்கோ இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போதும் அதே திட்டத்திற்காக அவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளாரா? என்பது இன்னமும் தெளிவாகவில்லை.

ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் குழு நியமனம் குறித்து அண்மையில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை என அமைப்பின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறெனினும் இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்குமாறு லியன் பொஸ்கோ அரசாங்கத்திடம் கோரியுள்ளார். இதேவேளை சட்ட மாஅதிபர் மொகான் பீரிஸுக்கும், ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்குமிடையில் அண்மையில் நிபுணர்கள் குழு நியமனம் குறித்து விரிவான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

எனவே ஆலோசனைக் குழுவை ஐ.நா. அமைக்குமா? என்பதும் நிச்சயமற்றதாக மாற்றமடைந்துள்ளது. அண்மையில் நியூயோர்க்கில் ஐ.நா. செயலாளர் பான் கீ மூனுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்ட இலங்கையின் நீதி ஆணையாளர் நாயகம் மொகான் பீரிஸ் ஆலோசனைக் குழு அமைப்பதை வலுவாக எதிர்த்திருந்தார்.

இதனிடையே அண்மையில் ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி பாலித ஹோகன்ணவை சந்தித்த பான் கீ மூன், நான் இலங்கைக்கு எதிரானவன் அல்ல எனத் தெரிவித்திருந்ததாக ஐ.நாவின் ஊடக அமைப்பான இன்னர்சிற்றிபிறஸ் தெரிவித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-3,5)


## Personal Classes

O/L Day Class க்கான கணிதமும், ஆங்கில பாடத்துக்குமான இலகுவான முறையில் துரித மீட்டல் வகுப்பு எதிர்வரும் O/L பரீட்சைக்கு நடைபெறும்.

இங்கு 6-O/L கணிதமும், 6-A/L ஆங்கிலமும், Spoken English with Grammar மற்றும் AAT, CAB-I, HNDA க்கான Business Mathematics உம் 1st Com, B.Com P-I,II பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளதால் அதற்கான துரித மீட்டல் வகுப்புக்களும் University (Internal, External) Students க்கான ஆங்கில வகுப்புகளும் கற்பிக்கப்படும்.

தொடர்புக்கு: ஆசிரியர்
T.Senthuran B.Com, Dip in Eng (Merit)
T.P.: 0777110093 / 0770204104
72/29, Panikar Lane, Thirunelvely, Jaffna.
(1275)


## ஐ.தே.மு.-ஐ.ம.மு. சந்திப்பு...

தலைவர் ரவூப் ஹக்கீம், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் ஆகியோர் நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

எனினும் இறுதி முடிபுகள் எதுவும் எட்டப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் தாம் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனை தனிப்பட்ட ரீதியில் சந்தித்துக் கலந்துரையாட வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்தனர்.

இத் தகவலைநாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன உறுதிப்படுத்தினார். கூட்டத்தின் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனை அவரது வீட்டில் வைத்து அவர்கள் சந்தித்துப் பேசியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பிலான இறுதித் தீர்மானம் நாளை எடுக்கப்படவுள்ளதாகக் கட்சியின் உள்ளகத் தகவல்கள் எமக்குத் தெரிவித்தன. (ச-5)

## வெள்ளை வானில் கடத்தப்...

யடியைச் சேர்ந்த 24 வயதுடைய பிரஸ்தாப யுவதி துன்னாலையில் உள்ள கலிகைக் கந்தன் ஆலய மாலைத் திருவிழாவுக்காகச் சென்றுள்ளார்.

இதன்போது வெள்ளை வானில் வந்த சிலர் அவரைக் கடத்திச் சென்றுள்ளனர். கடத்திச் செல்லப்பட்ட யுவதியிடமிருந்த தங்க நகைகளையும் சைக்கிளையும் பறிமுதல் செய்த கடத்தல்காரர்கள் யுவதியை தாக்கி கழுத்தை நெரித்தபோது அவர் மயக்கமடையவே துன்னாலைப் பகுதியிலுள்ள பற்றைக்குள் எறிந்து விட்டுச் சென்றுள்ளனர்.

மறுநாள்விழித்துக்கொண்டபிரஸ்தாபயுவதி, அயலவர்களின் உதவியுடன் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இது குறித்துப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

உடனடியாகச் செயற்பட்ட நெல்லயடிப் பொலிஸார் நெல்லியடி இராசகிராமத்தில் உள்ள வீடொன்றில் இருந்த பெண் உட்பட இருவரைக் கைது செய்ததுடன் கடத்தப்பட்ட யுவதியின் சைக்கிள் மற்றும் தங்க நகைகளை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச-5,24)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.